விடுமுறை வேதாகமப்பள்ளி

கைப் புத்தகம்



சீனியர் வகுப்பினர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

விடுமுறை கால வேதாகமப் பள்ளி

விடுமுறை வேதாகமப்பள்ளி என்றால் என்ன ?

வேதாகமம் கற்பதையே நோக்கமாகக்கொண்டு, விடுமுறை நாட்களில் அல்லது பாடசாலை நாட்களில் வகுப்பு நடைபெறாத நேரத்தில் இரண்டு வாரங்களுக்குத் தொடர்ச்சியாய் திருச்சபையின் ஆதரவில் நடைபெறும் பாடசாலையாகும். இதன் மூலம் சபையில் கிறிஸ்தவ அறிவு பெருக, கிறிஸ்தவ விசுவாசத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தருணம் கிடைக்கிறது.

விடுமுறை கால வேதாகமப் பள்ளியின் நோக்கங்கள்.

1. கிறிஸ்துவிலுள்ள இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தின் மூலம் சிறு பிள்ளையின் நித்திய இரட்சிப்பை நோக்கமாகக்கொண்டு வேதத்திலுள்ள கிறிஸ்தவ மூலாதார சத்தியங்களைக் கற்றுக்கொடுப்பது.

2. ஓய்வு நாட் பாடசாலைகளை விரிவாக்கி உறுதிப்படுத்துவது.

3. தற்கால சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் கிறிஸ்தவக் கல்வியை அளிப்பதற்காக சபையும், பாடசாலைகளும் செய்யும் ஊழியத்திற்கு அனுகூலமாயிருப்பது.

4. சிறு பிள்ளைகளுக்கு வேதாகமத்தை அறிமுகப்படுத்தி அதை எவ்வாறு உபயோகப்படுத்துவது என்று கற்றுக்கொடுப்பது.

5. பாட்டினாலும், ஜெபத்தினாலும் கர்த்தரை ஆராதிப்பதில் பயிற்சியளிப்பது.

6. குடும்பத்தில் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சக்தியளிப்பது.

விடுமுறை கால வேதாகம பாடசாலையின் அனுகூலங்கள்.

1. வருங்கால சபையின் தலைவர்களை இது உருவாக்கும்.

2. உலகத்தில் நம் வாலிபர் வழிவிலகி அழிந்துபோகாமல் இது பாதுகாக்கும்.

3. சிறுவர்களின் விடுமுறைக் காலத்தையும், ஓய்வுநேரத்தையும் கர்த்தருக்கேற்ற வழிகளில் செலவிட அனுகூலமாக இருக்கிறது.

4. வேதாகமத்தைத் தொடர்ந்து அனுதினமும் கற்கத்தருணம் தரும். ஒரு பிள்ளை சில வருடங்களில் ஓய்வு நாட் பாடசாலையில் கற்பவற்றை இரண்டுவார காலமுள்ள விடுமுறை கால வேதாகமப் பள்ளியில் கற்றுக்கொள்ள இடமளிக்கிறது.

5. இந்தக் கைப்புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி விடுமுறை கால வேதாகமப்பள்ளியின் முழுத்திட்டத்தில் பன்னிரண்டு தொடர்ச்சியான பாடங்கள் உள்ளன.

பிள்ளைகளுக்குப் பத்து வருடப் படிப்பும், உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்த மாணவ மாணவிகளுக்கும், பெரியோருக்கும் (adults) இரண்டு வருடப் படிப்பும் ஆகும். ஒரு பிள்ளை பாடசாலையின் முதலாம் வகுப்பு முதல் உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பு வரை ஒவ்வொரு வருடமும் V. B. S.ல் ஆஜராகியிருந்தால், V. B S.ன் இறுதி நாளில் ஒரு நற்சாட்சி பத்திரமும் (certificate), பத்து வருட முடிவில் ஒரு டிப்ளமோவும் (diploma) அளிக்கப்படும். Adult வகுப்பிலுள்ளவர்களுக்கும் ஒவ்வொரு வருட இறுதியிலும் நற்சாட்சிப் பத்திரம் அளிக்கப்படும். இம்முறையானது பிள்ளைகள் தொடர்ந்தேர்ச்சியாக முழுப்பாடத் திட்டத்தையும் படித்து முடிக்க ஆவலை ஊட்டி, வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தப் போதுமான வேதாகம அறிவைக் கொடுக்கிறது.

6. மாணவர்களுக்குத் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளுக்கு உதவிகள் அளிக்கப்படும்.

7. கிறிஸ்தவர்களல்லாத பிள்ளைகளையும் சுவிசேஷத்தின் ஒளிக்குள் கொண்டுவர இது ஓர் அரிய தருணமாகும்.

ஆயத்தம்.

1. ஸ்தல சபையிலுள்ள ஒரு முக்கியஸ்தருக்காகிலும் இவ்வூழியத்திற்குரிய தரிசனமும் வாஞ்சையும் வேண்டும்.

2. இப்படிப்பட்ட ஒரு பாடசாலையை ஏற்படுத்த வேண்டுமானல் சபையின் தலைவர்களின் அனுமதி அவசியம்.

3. பாடசாலை ஆரம்பிக்கும் பல மாதங்களுக்கு முன் ஜெபத்துடன் ஜாக்கிரதையாகத் திட்டமிடவேண்டும்.

4. சபையாரின் உதவியையும், உற்சாகத்தையும் ஊக்குவிக்க வேண்டும்.

5. ஜெபத்துடன் ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்கிற ஊழியர்களைச் சேர்க்கவேண்டும். இவர்களைக் கீழ்க்கண்ட இரண்டு அல்லது மூன்று பேர்கள் அடங்கிய கமிட்டிகளாகப் பிரிக்கலாம்.

(a) பொருளாதாரக்கமிட்டி.

(b) பிரச்சாரக்கமிட்டி.

(c) இலக்கிய, உபகரணப் பொருள் கமிட்டி. (ஆசிரியர் கைப் புத்தகங்கள், பிள்ளைகளின் நோட்டுப் புத்தகங்கள், பாடத்திற்குரிய விளக்கப் படங்கள் முதலியன)

(d) பொருள் சேர்க்கும் கமிட்டி. (மேசை, நாற்காலி, கரும் பலகை, கம்பளித் துணிப்பலகை (Flannel-board) முதலியன.

(e) இறுதி நாள் விழாக்கமிட்டி (Final Programme)

(f) ஊர்வல ஏற்பாடு (Procession) கமிட்டி.

(g) கண் காட்சி ஏற்பாடு (Exhibition) கமிட்டி.

பொருளாதார ஆலோசனைகள்

1. விடுமுறை கால வேதாகமப்பள்ளியை அந்தந்த இடத்தின் சபையே ஆதரித்தல் முறையாகும்.

2. பாடசாலையின் செலவைக் குறைந்த அளவில் வைக்க பொரு ளாதாரக் (Committee) குழு உழைக்கவேண்டும்.

3. **இப்பாடசாலைக்கு சபையின் மூலம் நிதி உண்டாக்கும் வழி வகைகள்.**

(a) ஒரு விசேஷ தினத்தில் இப்பாடசாலைக்கென சபையில் காணிக்கை சேகரித்தல்.

(b) தாய்மார் சங்கம், புருஷர்கள் சங்கம், ஓய்வு நாட்பாட சாலைகள் முதலியவைகளிலிருந்து உதவி பெறுதல்.

(c) சிறுவர்களின் சுவிசேஷ வேலையில் ஆவலுடையோரிட மிருந்து நன்கொடை பெறுதல்.

4. இதில் பங்கெடுக்கும் சிறுவர்கள் ஒரு சிறு தொகையைக் கட்டணமாகச் செலுத்தவேண்டும். இது இப்பாடசாலை நிர்வாகத்தில் தங்களுக்கு உத்திரவாதம் உண்டு என்று அவர்கள் உணரவும், அவர் களுக்குக் கொடுக்கப்படும் பொருட்களின் கிரயத்திற்கு ஈடு செய்யவும் பயன்படும்.

5. ஏழைப் பிள்ளைகளுக்குப் பணம் கட்ட ஒரு நிதி வேண்டும்.

6. கீழ்க்கண்ட வகைகளில் செலவு நேரிடும் :—

(a) ஆசிரியர்களின் கைப்புத்தகம்.

(b) பிள்ளைகளுக்குத் தேவையான வர்ணமிடும் படங்கள், தேசப்படங்கள் முதலியன.

(c) இப்பாடசாலைக்குரிய நோட்டுகளுக்கு உரிய விசேஷித்த அட்டைகள்.

(d) பாட்டுப் புத்தகங்கள்.

(e) தேர்ச்சிப்பத்திரம் (Progress Report)

(f) V. B. S. சின்னம் (Badge)

(g) ஆசிரியர்களுக்குத் தேவையான பாட விளக்கப்படங்கள் (Visual Aids).

(h) சபையாருக்குப் பிரியமானால், மாணவர்களுக்கு வன போஜனம் (Picnic) அல்லது தேநீர் விருந்து ஒழுங்கு செய்யலாம்.

(i) இறுதி நாள் விழாக்கொண்டாடச் செலவு (ஒலிபெருக்கி)

(j) ஊர்வலத்திற்கான கொடிகள்.

(அழைக்கப்பட்டக் குழுவினர் வந்து இப்பாடசாலையை நடத்த வேண்டியதிருக்குமானால், அவர்களுடன் கலந்தே பொருளாதாரத் திட்டம் வகுக்கப்படவேண்டும்)

வகுப்புகள் நடைபெறும் இடம்.

1. மாணவர்களுக்கு ஆலயத்தின்மேல் வாஞ்சையும் பயபக்தியும் ஏற்படும்படி பொதுவான தியானக் கூட்டமும் (Devotion), பாட்டுக் கூட்டமும் ஆலயத்தில் நடத்தப்படுவது நல்லது.

2. ஆலயத்தைச் சார்ந்த பாடசாலையிலும், ஆலயக்காம்பவுண்டிலுள்ள நிழல்தரும் மரங்களினடியிலும், ஆலயத்திற்கு அருகேயுள்ள வசதியான இடங்களிலும் வகுப்புகளை நடத்தலாம்

பாடசாலை நேரம்.

1. பொதுவாகப் பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் காலமே ஏற்றது. ஏனென்றால் அநேகம் பிள்ளைகள் வரக்கூடும். தகுந்த ஆசிரியர் கிடைக்க வாய்ப்பு உண்டு.

2. பாடசாலை நடைபெறும் காலத்தில் V. B. S.க்கு, விடுமுறை காலத்தைவிட அதிகமானவர்கள் வருவதாயிருந்தால், பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திற்கு முன் $1\frac{1}{2}$ மணி நேரமும், மாலையில் பாடசாலை நேரம் முடிவடைந்தபின் $1\frac{1}{2}$ மணி நேரமும் நடத்தலாம். அல்லது பாடசாலை அதிகாரியின் (Inspecter) அனுமதியின் பேரில் பாடசாலை வகுப்புகளை காலையில் முன்னதாக ஆரம்பித்து முடித்துவிட்டு மாலையில் மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக V. B. S. நடத்தலாம்.

3. விடுமுறை நாட்களின் அட்டவணையிலேயே (Leave list) V. B. S.க்காக பத்து நட்களைக் குறித்துக் கொள்ளலாம்.

விடுமுறை வேதாகமப் பள்ளியின் நிர்வாகம்.

1. இப்பள்ளிக்குத் தேவையான உத்தியோகஸ்தர்கள்.

1. மேற்பார்வையாளர் (Superintendent)
2. காரியதரிசி (Secretary)
3. பொக்கிஷதார் (Treasurer)
4. பாட்டுத் தலைவர் (Song leader)
5. தியானக் கூட்டத் தலைவர் (Devotional leader)
6. உபகரணத் தலைவர் (Visual aid Secretary)
7. உதவியாளர் (Helpers)

2. கீழ்கண்டவாறு வகுப்புகளைப் பிரித்து ஆசிரியர்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆரம்ப வகுப்பினர் (Beginners)	— முதலாம், இரண்டாம் வகுப்பு
பிரைமரி	— மூன்றும், நான்காம் வகுப்பு
ஜூனியர்	— ஐந்தாம், ஆறும் வகுப்பு
இண்டர்மிடியட்	— ஏழாம், எட்டாம் வகுப்பு
சீனியர்	— ஒன்பதாம், பத்தாம் வகுப்பு
முதியோர் (Adult)	— பத்தாம் வகுப்புக்கு மேற்பட்டோர். விரும்பினால் பெரியோர்.

உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர்கள் கடமைகள்

1. மேற்பார்வையாளரின் (Superintendent) கடமைகள்.

(a) V. B. S. டைரெக்டர், V. B. S குழு (team), விசேஷித்த பேச்சாளர்கள் இவர்களை அழைத்து நியமிப்பது.

(b) பள்ளிக்குத் தேவையான கமிட்டிகளை நியமித்து, அவர்களின் வேலையைக் கண்காணிப்பது.

(c) பள்ளியின் திறப்பிலும், மற்றும் விசேஷ சமயங்களிலும் உதவியாகப் பக்கத்திலிருப்பது.

(d) வகுப்புகளின் முன்னேற்றத்தைக் கவனிக்கக் கிரமமாகப் பார்வையிடுவது.

(e) பிள்ளைகளோடு தனிமையாகப் பேசி, தனித்தாள் ஊழியம் செய்வது.

(f) இறுதிநாள் விழாவுக்கான நிகழ்ச்சிகளை (Final Programme) ஒழுங்கு படுத்துவது.

2. பொக்கிஷதாரின் கடமைகள்.

(a) எல்லா மாணவரின் கட்டண வசூலுக்கும், அதன் கணக்கிற்கும் பொறுப்பாயிருப்பது.

(b) "ஏழை நிதிக்கு" தகுதியுள்ள மாணவர்களைக் கண்டு உதவிக்கு வழி செய்வது.

(c) செலவான தொகையைக் (Bill) கொடுத்தல்.

3. காரியதரிசியின் கடமைகள்.

(a) பள்ளியின் தினசரி மொத்த ஆஜரை செய்திப் பலகையில் குறிப்பது.

(b) ஒவ்வொரு வகுப்பின் தினசரி ஆஜரைக் குறிப்பது.

(c) வகுப்புகளின் தினத் தேவைகளைக் கொடுப்பது. (வகுப்பு நேரத்திலல்ல. வகுப்பு ஆரம்பிக்குமுன்)

(d) கால அட்டவணைப்படி மணியடிப்பது.

4. ஆசிரியரின் கடமைகள்

(a) வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையின் ஆத்தும இரட்சிப்புக்காக ஜெபித்தல்.

(b) தங்கள் பாடக் குறிப்புகளைத் தயாரித்து பாடத் திட்டத்தை நிறைவேற்றல்.

(c) வகுப்பு நேரத்திற்கு முன்னதாகவே கற்றுக் கொடுக்க வேண்டிய பாடத்தை நன்ருக அறிந்து ஆயத்தம் செய்தல்.

(d) ஒவ்வொரு பிள்ளையின் தின ஆஜருக்கும், தேர்ச்சிக்கும் ரிஜிஸ்டர் வைத்தல்.

(e) பிள்ளைகள் செய்யும் அன்றாடக் கை வேலையைச் சேகரித்துப் பத்திரப்படுத்துதல். (இக்கைவேலையை பிள்ளைகளின் நோட்டுப் புத்தகத்தில் பத்திரப்படுத்தி, இறுதி நிகழ்ச்சியில் கண் காட்சிக்கு வைக்க வேண்டும். இறுதி நிகழ்ச்சிக்குப் பின்தான் பிள்ளைகள் கையில் நோட்டுப் புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டும்.)

(f) இறுதி நிகழ்ச்சியில் தமக்குரிய நிகழ்ச்சிக்கென பிள்ளைகளைத் தயார் செய்தல்.

(g) தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள வேதாகம உபகரணங்கள் யாவற்றிற்கும் பொறுப்புடனிருந்து யாவற்றையும் திரும்ப ஒப்படைத்தல்.

(h) ஆரம்பப் பொதுக்கூட்டத்திற்குப் பிள்ளைகளை வரிசைப்படுத்தி கூட்டிப் போகுதல்.

(i) பொதுக்கூட்டத்தில் மாணவருடன் அமர்ந்து அங்கு ஒழுங்கு நிலவச் செய்வது.

(j) தங்கள் வகுப்பில் ஆஜரையும், ஒழுங்கையும் காப்பது.

(k) பாட்டுக் கூட்டத்தில் மாணவர்களை உற்சாகப்படுத்த, மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர்களும் அபிநயத்துடன் (actions) பாடுவது.

(l) பிள்ளைகளிடமிருந்து கட்டணம் (fees) சேகரித்து பொக்கிஷதாரிடம் கொடுப்பது.

(m) ஆசிரியர்களின் ஜெபக் கூட்டங்களிலும், ஆலோசனைக் கூட்டங்களிலும் தவறாது ஆஜராவது.

5. பாட்டுத் தலைவரின் கடமைகள்.

பாட்டுக் கூட்டத்திற்கு அவரே முழுப் பொறுப்பாளி. கூடுமான வரை அநேக புதுப் பாட்டுக்கள், அபிநயத்துடன் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். எந்தவிதமான ஒழுங்கின்மையும் பிள்ளைகளிடம் காணப்படாதபடி தகுந்த ஆயத்தத்துடன் தொடர்ந்தேர்ச்சியாக இடைவேளையில்லாமல் (Pause) பாட்டுக்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

6. தியானக் கூட்டத் தலைவரின் கடமைகள்.

தியானக் கூட்டத்தைத் தானாகவோ அல்லது மற்றவர்களைக் கொண்டோ நடத்தலாம். தியான விளக்கத்திற்கு உபகரணங்கள் கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும். எந்த விதமான ஒழுங்கின்மையும் பிள்ளைகளிடம் காணப்படாதபடி தகுந்த ஆயத்தத்தோடு தாமதமில்லாது தொடர்ந்தேர்ச்சியாக இடைவேளை யில்லாமல் தியானக் கூட்டம் நடைபெற வேண்டும்.

7. உபகரணத் தலைவரின் கடமைகள்.

ஒவ்வொரு நாளும் ஆசிரியர்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொடுத்து, அன்றன்று வகுப்பு முடிந்த பின் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. உதவியாளரின் கடமைகள்

கீழ்வகுப்பு மாணவர்களின் நோட்டுப் புத்தகங்களில் ஆஜர் மனிதனை ஒட்டுவதும், பிள்ளைகளிடம் மனப்பாட வசனங்களைக் கேட்பதும், ஆஜர் குறிப்பதும், போன்ற உதவிகள் புரியவேண்டும். (ஆசிரியரல்லாதாருக்கும், தாய்மாருக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு அளிக்கிறது.)

மாணவர்களைச் சேர்த்தல்

1. உங்கள் V. B. S. தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே, இப்பள்ளிக்கு வரக்கூடிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையை வகுப்பு வாரியாகக் குறித்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பவேண்டும். அப்படியானால்தான் உங்களுக்குத் தேவையானவைகளைச் சரிவர அனுப்ப முடியும். கடைசி நேரத்தில் அனுப்புவீர்களானால், உங்களுக்குத் தேவையானவைகளைப் போதுமான அளவு பெற்றுக்கொள்ள முடியாது. வகுப்பு வாரியாக எண்ணிக்கை அனுப்பும் போது கிறிஸ்தவப் பிள்ளைகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களின் மொத்த எண்ணிக்கை அனுப்பப்பட வேண்டும். ஏனெனில் மற்ற மதத்தினரும் பங்கெடுக்க ஆசிக்கின்றனர். உபயோகித்தது போக மீதியானவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதைக் கவனித்துக் கொள்ளவும்.

2. ஆரம்பப்பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளி முடிய உள்ள மாணவ, மாணவிகள் இப்பள்ளியில் கலந்துகொள்ள ஆர்வம் ஊட்டப்படவேண்டும்.

3. உங்கள் கிராமத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளும் (இந்துக்கள், முகமதியர்) இப்பள்ளியில் சேர்ந்துகொள்ள விரும்பினால் பெற்றோரின் அனுமதியின் பேரில் சேர்த்துக்கொள்ளலாம்.

திறப்புத்தின வேலைகள்

1. ஆசிரியர் ஜெபக்கூட்டம்

2. திறப்புக் கூட்டம்

(a) V. B. S.ல் பங்கெடுத்துக்கொள்ளும் ஆசிரியர்களையும், உத்தியோகஸ்தர்களையும் அறிமுகப்படுத்துதல்.

(b) V. B. S.ன் கருத்தையும் (Theme), கருத்துப்பாட்டையும் (Theme song) அறிமுகப்படுத்துதல்.

(c) பாட்டாராதனை

3. மாணவர்களை வகுப்பு வாரியாகப் பிரித்தல்

4. ஆசிரியர்களுக்குரிய வகுப்பறையையும், மாணவர்களையும் ஒப்படைத்தல்.

5. இவ்வகுப்பு நேரத்தில் ஆசிரியரின் பொறுப்பு:—

(a) தனது வகுப்புக்குரிய ரிஜிஸ்தரைத் தயாரித்தல். (அதாவது பிள்ளைகள் ஒவ்வொருவருடைய பெயரையும் பதிவு செய்தல்)

(b) வீட்டிலிருந்து V B. S. கட்டணம் (fees), வேதாகமம், பேப்பர், பென்சில், கலர் முதலியன கொண்டு வர மாணவாகளுக்குச் சொல்லல்.

(c) அடுத்த நாள் V. B. S. க்குக் கற்று வரவேண்டிய மனப்பாட வசனங்களைச் சொல்லி விடுதல்.

6. மாணவர்களுடன் ஜெபம் செய்து, வீட்டிற்கு அனுப்புதல்.

7. ஆசிரியர்கள் ஒன்று கூடி, அடுத்த நாள் வேலைக்குரிய குறிப்புகளைப் பெற்றுப்போகுதல்.

ஆலோசனைக்கான கால அட்டவணை

ஆசிரியர்களின் ஜெபக்கூட்டம்	— 15 அல்லது 30 நிமிடங்கள்
மாணவர்களை வரிசைப்படுத்துதல்	— 5 நிமிடங்கள்
பாட்டுக்கூட்டம்	— 30 நிமிடங்கள்
முதல் பாட நேரம்	— 45 நிமிடங்கள்
மனப்பாடம்	— 15 நிமிடங்கள்
இரண்டாம் பாட நேரம்	— 45 நிமிடங்கள்
தியானக்கூட்டம்	— 30 நிமிடங்கள்
ஆசிரியர் கூட்டம்	— தேவையான நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

(விருப்பமானுல் பாட்டுக் கூட்ட நேரத்தையும், தியானக்கூட்ட நேரத்தையும் மாற்றிக்கொள்ளலாம்.)

இறுதி நிகழ்ச்சி

1. இறுதி நிகழ்ச்சியின் நோக்கம்.

(a) தங்கள் வேலைகளை நன்றாகச் செய்த பிள்ளைகளைத் தெரிந்தெடுத்துத் தாம் V. B. S. ல் படித்தவைகளைப் பெற்றோருக்கும், சிநேகிதருக்கும் காட்ட சமயம் வாய்க்கச் செய்வது.

(b) V. B. S. ல் தாங்கள் கற்றுக்கொண்டவற்றை மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து மனதில் ஆழமாகப் பதியச்செய்வது.

(c) சபை முழுவதற்கும் "இரட்சிப்பின்" செய்தியை அளிப்பது.

2. இறுதி விழாவின் நிகழ்ச்சிகள் யாவும் அந்த வருடத்தில் கருத்தை (Theme) மையமாகக் கொண்டு இருக்கவேண்டும்.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் தலைவர் மேடையிலிருந்து அவ்வருடக்கருத்தையும், நிகழ்ச்சிகளையும் விளக்கிக் கூறவேண்டும்.

4. இறுதி நிகழ்ச்சிக்குள் சேர்ந்தவை:—

(a) பிள்ளைகளின் கைவேலைகள், நோட்டுப் புத்தகங்கள் முதலியவற்றால் அழகாக அமைக்கப்பட்ட கண்காட்சி.

(b) ஊர்வலம்

(c) இறுதி விழா நிகழ்ச்சிகள்.

(d) நிகழ்ச்சியின் முடிவில் தேர்ச்சிப் பத்திரங்கள் (Progress Report) வகுப்பு வாரியாக ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். ஆசிரியர்கள் தேவாசீர்வாதம் கூறினபின்புதான் மாணவர்களிடம் நோட்டுப் புத்தகங்களையும், கைவேலைகளையும், தேர்ச்சிப் பத்திரத்தையும் கொடுக்க வேண்டும்.

5. இறுதி விழாவில் நடித்தலுக்கான சில குறிப்புகள்.

(a) ஒவ்வொரு நடிப்பும் (item) மூன்று நிமிடங்கள் தான் இருக்கவேண்டும்.

(b) இயேசுவாக நடிப்பது கூடாது. இயேசுவுக்குப் பதிலாக அசரீரி வாக்காகப் பின்னாலிருந்து பேசலாம்.

(c) பகட்டான ஆடை அலங்காரம் தேவையல்ல. ஏனெனில் V. B S. ல் கலந்துகொண்ட மாணவர்கள் யாவரும் மேடைக்கு முன்னுல் வகுப்பு வாரியாக ஆசிரியருடன் உட்கார்ந்து பாட்டு பாடவேண்டும். எல்லா நடிப்புகளையும் கவனத்துடன் பார்க்கவேண்டும். அலங்கார ஆடைகளுடன் கூடிய வேஷத்துடன், பிள்ளைகள் மத்தியில் வந்து உட்கார வெட்கப்படுவார்கள்.

(d) ஒவ்வொரு நடிப்புக்குமிடையில் இடைவெளி நேரமிராது உடனுக்குடனே அடுத்த நடிப்பை நடத்தவேண்டும். இடைவெளி நேரமிருப்பின், சிறுவர்கள் அமைதலாக இருக்க முடியாது, சப்தம் ஏற்படும். ஆகவே மேடையில் ஒரு நடிப்பு நடந்துகொண்டிருக்கையில், அடுத்த நடிப்புக்குரியவர்கள் மேடையின் கீழ் ஒரு பக்கத்தில் தயாராக இருத்தல் நல்லது. ஒவ்வொரு நடிப்புக்கும் இடையில் திரை இழுத்தல் அவசியமல்ல.

(e) மனப்பாட வாக்கியங்களை ஒரு முழுப்பகுதியாகச் சொல்லும்போது ஒருவரே முழுவதுமாகச் சொல்ச் செய்யவேண்டும். ஏனெனில் ஒரு அதிகாரம் முழுவதையும் பிள்ளைகள் எங்ஙனம் மனப்பாடம் செய்து சொல்லுகிறுர்கள் என்பதைப் பிறர் அறிய இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

(f) **V. B. S. பாடசாலை நேரந்தவிர மற்ற நேரங்களில் தான் இறுதி விழாவிற்கான நிகழ்ச்சிகளைப் பயிற்சி செய்யவேண்டும்.**

தொடர் ஊழியத்திற்கு (Follow-up) ஆலோசனைகள்

1. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பெயர்களை குருவானவரும், அவரது உதவியானவரும் சரிபார்த்து V. B. S. நடைபெறுவதற்கு முன் ஓய்வு நாள் பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் பெயர்களையும், விலாசங்களையும் குறித்துக் கொள்ளவேண்டும்.

2. அப்பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று பிள்ளைகளையும், பெற்றோர்களையும் ஆராதனைக்கும், ஓய்வு நாட் பாடசாலைக்கும் அழைக்கவேண்டும்.

3. ஆசிரியர்களும் தம் வகுப்பு மாணவர்களை அடிக்கடி பார்வையிட வேண்டும்.

4. V. B S. யின் மூலம் புகுத்தப்பட்ட புதிய முறைகள், பாட்டுகள் முதலியவற்றை ஓய்வு நாள் பாடசாலையில் உபயோகிக்கலாம்.

5. திடப்படுத்தல், ஜெபக்கூட்டம், வேதபாடக்கூட்டம், சுவிசேஷ ஊழியக்கூட்டம் முதலியவை இதன்மூலம் ஏற்பட வசதி உண்டு.

6. அடிக்கடி V. B. S. பிள்ளைகளுக்கு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

7. மாதத்தில் ஒரு ஞாயிறு ஆலய ஆராதனை பிள்ளைகளின் ஆராதனையாக பிள்ளைகளால் நடத்தப்பட ஒழுங்கு செய்யவேண்டும்.

வருஷத்திற்கொருமுறை V. B S. ஆசிரியர்களுக்கும், ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தியானக்கூட்டம் நடத்தப்படவேண்டும்.

விடுமுறை கால வேதாகமப் பள்ளியின் பலாபலன்கள்.

1. சிறுவர்களில் அநேகர் கிறிஸ்துவுக்காகத் தீர்மானங்கள் செய்வது.

2. முழுக் குடும்பங்கள் ஆலயத்திற்கு இழுக்கப்படுவது.

3. ஓய்வுநாள் பாடசாலையில் அங்கத்தினர் கூடுதல், போதனை முறையில் தேர்ச்சியும், பலனும் பெருகுவது.

4. சபையில் புதிய ஆர்வமும், வளர்ச்சியும் உண்டாவது.

5. வேதாகமப் படிப்பில் புத்துயிர் எற்படுவது.

6. ஜெப ஐக்கிய குழு எற்படுவது.

முக்கிய குறிப்பு

V. B. S. இல் படித்த ஓர் பிள்ளை ஒவ்வொரு வருடமும் தான் பெற்றுக்கொள்ளும் தேர்ச்சிப் பத்திரத்தைப் பத்திரமாக வைத்திருந்து, பத்தாவது வருட முடிவிலே, அவைகளைக் காண்பித்து, V. B. S. இல் 10 வருடங்கள் படித்தற்கான ஓர் நற்சாட்சிப் பத்திரத்தைப் (diploma) பெற்றுக்கொள்ளவேண்டும்.

கானான் ஜெயிக்கப்படுதலும் பங்கிடப்படுதலும்



சீனியர் வகுப்பினர் (Senior) ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகள்.

முதலாம் வருடப் பாடத்திட்டம்

பழைய ஏற்பாட்டு சரித்திரமும், பூகோளமும்

(யோசுவா முதல் சவுல் வரை)

பின்வரும் பாடங்கள் பழைய ஏற்பாட்டு சரித்திரத்துக்கும் பூகோளத்துக்கும் முகவுரை ஆகும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் ஆசிரியர்களின் உபயோகத்திற்கென்றே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்கு களைப்பூட்டும் முறையில் நீண்ட உபந்நியாசங்கள் செய்யாமல் பழையேற்பாடு, சரித்திர சம்பந்தமான இடங்களில் வாழ்ந்த ஆண், பெண் பிள்ளைகளின் உண்மையான வாழ்க்கை வரலாறு அடங்கிய ஒரு புத்தகம் என்பதை ஆசிரியர் உணர்த்துவது அவர்கள் கடமையாகும். அது பல சரித்திரம், சம்பவங்களின் தொகுப்பு அல்ல. ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

பழைய ஏற்பாட்டின் சரித்திரம் எளிதாய் விளங்கும்படி 14 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன இந்த வருடத்திற்கு யோசுவா முதல் சவுல் வரை உள்ள 2 பகுதிகள் (9, 10) இத்திட்டத்தில் அடங்கியுள்ளன

ஒரு மாணவன் 3 வருடங்கள் இத்திட்டத்தின்படி படித்து முடித்தால் பழைய ஏற்பாட்டின் வரிசைக் கிரமமான சம்பவங்களையும், அந்த சம்பவங்கள் என்ன என்பதையும் அவை எங்கே நடந்தன என்பதையும் பற்றிய ஒரு பொதுவான அறிவைப் பெறுகிறான்.

மாணவர்கள் தங்கள் வேதாகமங்களிலிருந்து எல்லா சரித்திரங்களையும் வாசிப்பதற்கு சமயம் போதாது. மாணவர்கள் தங்கள் சொந்த நேரத்தில் ஆலோசனைக்காக கொடுக்கப்பட்டிருக்கும் பாகத்தை வாசிக்கலாம்.

மாணவர்கள் வகுப்பில் கற்றுக்கொண்ட பாடங்களிலுள்ள இடங்களைக் குறிக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் பழைய ஏற்பாட்டு தேசப்படங்கள் கொடுக்கப்படவேண்டும். மாணவர்களுக்குத் தேசப்படத்தில் இடங்களைக் குறிக்க உதவி செய்யத்தக்கவாறு ஆசிரியர் முன்னதாகவே வேதாகம தேசப்படம் வைத்து ஆயத்தம் செய்து வரவேண்டும்.

முக்கிய குறிப்பு. ஒவ்வொரு நாள் பாடத்தின் தலைப்பில் நாள் 1, நாள் 2, நாள் 3, etc. காணலாம்.

பழைய ஏற்பாடு பாடக்குறிப்புகள்— (இரண்டாவது வருடம்)

பகுதி 9—கானான் ஜெயிக்கப்படுதல் (யோசுவாவால் நடத்தப்பட்டது)

பகுதி 10—நியாயாதிபதிகளின் கீழ் இஸ்ரவேலர்.

நாள் 1 பகுதி 9

IX. கானான் ஜெயிக்கப்படுதல்

1. யோசுவாவின் சரித்திரம்—யோசு 1—6 அதிகாரங்கள்

A. யோசுவாவின் அழைப்பு. யோசுவா 1 : 1—9
எரிகோவிற்கு வேவுகாரர் அனுப்பப்படுதல். அதி. 2.

(1) ராகாபால் காப்பாற்றப்படல்.

(2) ராகாபுக்குப் பாதுகாப்பு வாக்களிக்கப்படல்.

B. யோர்தானைக் கடத்தல்—யோசுவா 3 : 1—5 : 15.

(1) உடன்படிக்கைப்பெட்டி முதலாவது சமர்த்து செல்லப் படவேண்டும். யோசுவா 3 : 3—17.

(2) யோர்தானுக்கு மேற்கே கில்காலிலே முகாமிட்டனர். (Camp) யோசுவா 5 : 9—12.

(a) பஸ்காவை ஆசரித்தனர். யோசு 5 : 10.

(b மன்னாவுக்குப் பதிலாக வேறு ஆகாரம் கொடுக்கப் படுதல். யோசு 5 : 11, 12.

3. அதர்சனியான (காணப்படாத) தளபதி (Unseen Captain) யோசு 5 : 13—15.

C. எரிகோவை ஜெயித்தல். யோசு. 6.

(1) பட்டணத்தின் முற்றுகை. யோசு. 6 : 1.

(2) யோசுவாவிற்கு தேவனுடைய வாக்குத்தத்தம். யோசு. 6 : 2.

(3) ஜெயம் கிடைத்த விதம். யோசு. 6 : 3—21.

(a) பட்டணத்தைத் தினம் ஒரு தடவையாக ஆறு நாட்கள் சுற்றி வருதல்.

(b) ஏழாவது நாளில் ஏழு தடவை சுற்றுதல்.

(c) சப்தமிட்டவுடன் மதில்கள் உடைந்து விழுதல்,

(d) தேவன் சொன்னபடியே சகலமும் நடந்தது,

(4) ராகாபும், அவள் வீட்டாரும் காப்பாற்றப்படுதல். யோசு 6 : 22—25.

வாசிக்கவேண்டிய பாகம் : யோசுவா 1, 6 அதி.

ஆலோசனைக்கான குறிப்புகள் **நாள் 1**

தேவனே இஸ்ரவேலரை நடத்தினவர். யோசுவாவின் மூலம் நடத்தினர். இதுவே இஸ்ரவேலருடைய வெற்றியின் இரகசியம். தேவனுடைய பிரசன்னத்தை நாம் எப்போதும் உணர்கிறவர்களாய் இருக்கிறோமா? இதை நாம் விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளுகிறோம்.

பூகோளப்பாடம் **நாள் 1**

(கொடுக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனப்படத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்)

1, யோர்தான் நதி, இஸ்ரவேலருக்காக இரண்டாகப் பிரிந்த இடம்.
2. கானானின் முதல் முகாமிட்ட கில்கால்.
3. தேவன் அழித்த எரிகோ.
4, சவக்கடல்.

"உன் வேதாகமத்தை அறிந்து கொள்" **நாள் 1**

1. யோசுவாவிற்கு கர்த்தருடைய வாக்குத்தத்தம் என்ன? யோசு 1 : 3, 5
2. எரிகோ எவ்விதம் ஜெயிக்கப்பட்டது? யோசு 6.
3. ராகாப் காப்பாற்றப்பட்டதேன்? யோசு 2 : 12, 13.
4. யோர்தான் நதியைக் கடக்கும்பொழுது முதலாவது சென்றது எது? யோசு 3 : 11.
5. இஸ்ரவேலருக்குத் தளபதியாக இருந்தது யார்? யோசு 5 : 13—15.

நாள் 2

2. **ஆயி ஜெயிக்கப்பட்டது.**

A. **ஆகான், எரிகோவின் விலக்கப்பட்டப் பொருட்களை எடுத்ததினால் கீழ்ப்படியாதவனானான். யோசு 7 : 1. இது ஆண்டவருக்கு வெறுப்பு உண்டாக்கினது.**

B **எரிகோவிலிருந்து ஆயியைப் பார்த்து வரும்படி வேவுகாரரை அனுப்புதல். யோசு 7 : 2.**

சிலர் மாத்திரம் போனாலும் அதைக்கைப்பற்ற முடியும் என்றனர். யோசு 7 : 3.

C. **யோசுவாவின் வீரர்கள் முறியடிக்கப்பட்டு ஓடுதல், யோசு 7 : 4, 5.**

(1) யோசுவாவின் கலக்கமும் ஜெபமும். யோசு 7 : 6—9.
(2) தேவனுடைய பதில். யோசு 7 : 10-15. ஒருவனுடைய பாவத்தினால் தோல்வி ஏற்பட்டது. யோசு 7 : 11, 12.

(சங்: 66 : 18-ம் வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும்)

(3) ஆகானுடைய பாவம் கண்டு பிடிக்கப்படுதல். யோசு. 7 : 16—26' தண்டனை—கல்லெறிந்து கொல்லப் படுதல். யோசு 7 : 25.

D. **'ஆயி' ஜெயத்திற்குத் திட்டம்.** **அதி:** 8

(1) யோசுவா சிலருடன் பட்டணத்தைச் சுற்றி வந்ததும், ஊருக்குப்புறம்பே பாளையம் காத்திருந்ததும்.

(2) ஆயிப்பட்டணத்தின் பட்டாளங்கள் வெளிப்பட்டதும் யோசுவாவின் கூட்டத்தார் முறிந்து ஓடுவது போல ஓடவேண்டும்.

(3) பதிவிருந்த பாளையத்தின் சேனை, பட்டணத்தைக் கைப் புற்ற வேண்டும்.

வாசிக்க வேண்டிய பாகம். யோசு 7-ம் அதி.

ஆலோசனைக்கான குறிப்புகள் **நாள் 2**

ஏழாம் அதிகாரத்திலிருந்து, பாவத்தின் மேலுள்ள தேவ கோபத்தையும், ஆகானின் குடும்பம் முழுவதுமே தண்டிக்கப்பட்டதையும் பார்க்கிறோம், ஆகான் பாவத்திற்காக மரித்ததுபோல நாம் மரிக்கவேண்டியதில்லை. ஏனெனில் நாம் தண்டனைக்குத் தப்ப வேண்டுமானால் இயேசு ரட்சகரை நமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பூகோளப் பாடம் **நாள் 2**

'ஆயி' பட்டணத்தைக் குறிப்பிடு.

"உன் வேதாகமத்தை அறிந்து கொள்"

1. யோசுவாவின் சேனைகள் 'ஆயி' பட்டணத்தில் தோல்வியடைந்ததற்குக் காரணமென்ன? யோசு 7 : 11.

2. ஆகானுக்குக் கிடைத்த தண்டனை என்ன? யோசு 7 : 25.

3. பாளையத்தை விட்டு பாவம் வெளியேற்றப்பட்டபோது ஆயிப் பட்டணத்தின் மேல் வெற்றி கிடைத்ததா? அதி 8.

4. நம்முடைய பாவங்களால் மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்களா?

நாள் 3

3. **கிபியோனியர்கள் சரித்திரம்:** யோசு. 9.

A. **எல்லா இராஜாக்களும் யோசுவாவிற்கு விரோதமாக யுத்தஞ் செய்து திட்டமிட்டனர்.** யோசு 9 : 1, 2

B. **கிபியோனியர்கள் யோசுவாவினிடம் தயவு நாடுதல்.** **யோசு.** 9 : 3 – 27.

(1) தூரத்திலிருந்து வந்தவர்கள் போல பாசாங்கு செய்தல். யோசுவா அவர்களுடன் சமாதானம் பண்ணுதல். (கர்த்தர் மோசேயிடம் கானான் தேசத்தார் யாவரையும் அழிக்கும்படிக் கட்டளையிட்டிருந்தார். ஆதலால் இந்த உடன்படிக்கை செய்தது தவறு) யோசு 9 : 24.

(2) கிபியோனியர் இஸ்ரவேலருடைய வேலையாட்களாகுதல். யோசு. 9 : 27.

C. **கிபியோனில் வெற்றி. யோசு.** 10

(1) கிபியோனியர் யோசுவாவினிடம் உதவி வேண்டுதல். யோசு 10 : 6. யோசுவாவிற்கு கர்த்தருடைய வாக்கு. யோசு 10 : 8.

(2) யுத்தம்.

a கல் மழை — யோசு 10 : 11.

b யோசுவாவுக்கு அனுகூலமாக சந்திரனும், சூரியனும் தரித்து நின்றது. யோசு 10 : 12—14.

குறிப்பு இதைத் தவிர வேறு வெற்றிகளும் கிடைத்தன. அதைப்பற்றி விபரம் கூற இயலாது. கடைசியாக அவை முடிவு பெற்று, தேசம் 12 கோத்திரத்தாருக்கும் பங்கிடப்பட்டது.

வாசிக்கவேண்டிய பாகம். யோசு 9-ம் அதி.

ஆலோசனைக்கான குறிப்புகள் நாள் 3.

யோசுவா ஜெபித்துக் கர்த்தரிடத்தில் ஆலோசனை பெறுததினால் கிபியோனியரால் ஏமாற்றப்பட்டான். ஜெபமே ஜெயம் தரும்.

பூகோளப் பாடம் நாள் 3.

(இடங்களைக் குறிப்பிடு)

1. கிபியோனியர் யோசுவாவுடன் சமாதானம் பண்ணும்படி வந்த கில்கால்.

2. கிபியோனியரின் தேசம்.

"உன் வேதாகமத்தை அறிந்துகொள்" நாள் 3.

1. கிபியோனியர்கள் யோசுவாவை ஏமாற்ற முடிந்தது எப்படி? யோசு 9 : 14.

2. கிபியோனியர்கள் என்ன செய்கிறவர்களானார்கள்? யோசு 9:27.

3. இஸ்ரவேலருடைய யுத்தத்தில் தேவன் அவர்களுக்கு செய்த உதவி என்ன? யோசு 10 : 12, 13.

நாள் 4. தேசத்தைப் பங்கிட்டது.

எகிப்து தேசத்தில் யாக்கோபு தன் மக்களை ஆசீர்வதித்த பொழுது யோசேப்பிற்கு தலைச்சன் பெறவேண்டிய உரிமைகளும் கொடுக்கப்பட்டன. ஆகவே அவனது இரட்டிப்பான பாகம், மனாசே, எப்பிராயீம் என்பவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்கள் இருவரும் கோத்திரத் தலைவர்களானார்கள். லேவியர்கள் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டு மற்றக் கோத்திரத்தாரால் பராமரிக்கப்பட்டனர். இஸ்ரவேல் வம்சங்களாவன:- ரூபன், சிமியோன், யூதா, இசக்கார், செபுலோன், காத், ஆசேர், தாண், நப்தலி, பென்யமீன், மனாசே, எப்பிராயீம்.

ரூபன் கோத்திரத்தாரும், காத் கோத்திரத்தாரும் மனாசே கோத்திரத்தில் பாதிப் பேரும் கானானை ஜெயிக்கு முன்னமே யோர்தானுக்கு கிழக்கேயுள்ள இடங்களில் தாங்கள் குடியேற உத்திரவு கேட்டுக் கொண்டனர். அதனால் நாம் இக்கோத்திரத்தார்களை யோர்தானுக்குக் கிழக்கேயும் மற்ற கோத்திரங்களை யோர்தானுக்கு மேற்கேயும் காண்கிறோம்.

வாசிக்கவேண்டிய பாகம். யோசு 11-24 அதிகாரங்கள்.

ஆலோசனைக்கான குறிப்புகள். நாள் 4.

எகிப்திலிருந்து வந்த இஸ்ரவேலருள், கானானுக்குள் அனுமதிக்கப்பட்ட இருபத்தொன்று வயதிற்கு மேற்பட்டவர்களில் யோசுவா, காலேப் ஆகிய இருவர்களே. காலேப் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினதினால் யோசுவாவுடன் இவனும் கானானுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் பெற்றான். பிரவேசித்தது மட்டுமல்ல, எபிரோன் அவனுக்கு சுதந்திரமாக அளிக்கப்பட்டது. நாமும் காலேபைப் போல் இயேசுவை உத்தமமாய் பின்பற்றினால், மற்றவர்களுக்குக் கொடுக்கப்படாத விசேஷ ஆசீர்வாதங்களை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக்கொள்ளுவோம். தேவனை முழுவதுமாகப் பின்பற்றத் தீர்மானம் செய்வோமாக.

பூகோளப் பாடம் நாள் 4

கோத்திரத்தாரின் எல்லைகளை தேசப்படத்தில் குறிப்பிடவும். கோத்திரப் பெயர்களை மனப்பாடம் செய்யவேண்டியதில்லை. பின்வரும் பாடங்களில் இக்கோத்திரங்களைப் பற்றிச் சொல்லப்படுமாகையால் மாணவர் ஒவ்வொரு கோத்திரத்தாரின் எல்லையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எல்லை குறிப்பிடப்பட வேண்டிய கோத்திரங்களின் பெயர்கள்.

1. ரூபன்	5. செபுலோன்	9. நப்தலி
2. சிமியோன்	6. காத்	10. பென்யமீன்
3. யூதா	7. ஆசேர்	11. மனாசே
4. இசக்கார்	8. தாண்	12. எப்பிராயீம்

"உன் வேதாகமத்தை அறிந்துகொள்" நாள் 4.

1. கானான் தேசத்தைப் பங்கிட்டபோது லேவி கோத்திரத்திற்குப் பங்கில்லை. அப்படியானால் எவ்விதத்தில் பன்னிரண்டு பாகமாகப் பிரித்தார்கள்?

2. யாருக்கு இரட்டைப் பங்கு கிடைத்தது?

3. ஏன் அவ்வாறு கொடுக்கப்பட்டது?

நாள் 5

பகுதி 10

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் இராஜ்யம்.

இஸ்ரவேல் ஜனங்கள் கானானியரை தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிடுவதில் தவறிவிட்டார்கள். அவர்கள் கர்த்தரை மறந்து தங்கள் மத்தியிலிருந்த கானானியரின் தேவர்களை ஆராதிக்கத் தொடங்கினர். ஆதலால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தண்டனையாக அவர்கள் தேசத்தை, சுற்றிலுமுள்ள தேசத்தார் படையெடுக்கும்படி செய்தார். பின்னர் அவர் இஸ்ரவேலரை அவர்களுடைய பகைவரினின்று மீட்கும்படியாக தலைவர்களை எழுப்பினார் அந்தத் தலைவர்களே நியாயாதிபதிகளெனப்படுவர். அவர்கள் பதினைந்து பேர். முக்கியமானவர்களை மாத்திரம் நாம் கவனிப்போம்.

1. ஒத்னியேல்	6. அபிமலேக்கு	11. ஏலோன்
2. ஏகூத்	7. தோலா	12. அப்தோன்
3. சம்கார்	8. யாவீர்	13. சிம்சோன்
4. தெபொராள்	9. யெப்தா	14. ஏலி
5. கிதியோன்	10. இப்சான்	15. சாமுவேல்

I. தெபொராளின் சரித்திரம் நியா 4 : 2—21.

A. கானானியரின் ராஜா. (பலஸ்தீனாவின் வடபாகம்) இஸ்ரவேலருக்கு விரோதமாய் எதிர்த்து வந்து அவர்களை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கினான். நியா 4 : 2.

B. தெபொராள் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். நியா 4 : 4.
வீடு — பெத்தேலுக்கு அருகில் — பேரீச்ச மரத்தின் கீழ்.

C. கானானிய இராஜாவின் சேனாதிபதி சிசெராவை எதிர்த்து பாராக்குடன் பத்தாயிரம் மனிதரை அனுப்பினான். நியா 4:14.

(1) சிசெரா இரதத்தை விட்டிறங்கி ஓடிப்போனான். பாராக் பின் தொடர்ந்தான். நியா 4 : 15—17.

(2) சிசெரா யாகேலின் கூடாரத்திலே அடைக்கலம் புகுந்தான். தூங்கினான். நியா 4 : 17—20. யாகேலினால் கொல்லப்பட்டான். நியா 4 : 21.

D. இஸ்ரவேலருக்கு 40 வருஷம் சமாதானம் உண்டாயிற்று.

வாசிக்கவேண்டிய பாகம். நியா 4 : 2—24.

ஆலோசனைக்கான குறிப்புகள் நாள் 5

அவிசுவாசத்தினுலும், கோழைத்தனத்தினுலும் பாராக் ஆண்டவருடைய வாக்கின்படிக்கு வரவிருந்த ஆசீர்வாதத்தை இழந்தான். தெபொராள் அந்த தகுதியைப் பெற்ருள். நம்முடைய ஜீவியத்திலும், எத்தனை தடவைகள் அவிசுவாசத்தினுலும், கீழ்ப்படியாமையினுலும் தேவ ஆசீர்வாதத்தை இழந்து போகிறோம்.

பூகோளப் பாடம் நாள் 5

(இடங்களைக் குறிப்பிடு)

1. தெபொராளின் கூடாரமிருந்த பெத்தேல்.
2. பாராக்கும், சிசெராவும் சண்டையிட்ட தாபோர் மலை.

"உன் வேதாகமத்தை அறிந்துகோள்" நாள் 5

1. தேவன் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரைத் தண்டிக்கும்படி சுற்றிலுமிருந்த புறஜாதியினரை ஏன் அனுமதித்தார்? நியா 4:1.

2. கானனியர்கள் இஸ்ரவேலரைப் பங்கப்படுத்தினபொழுது அவர்களுக்கு நியாயாதிபதியாக இருந்தது யார்? நியா 4 : 4.

3. அவளுக்கு உதவி செய்தவன் யார்? நியா 4 : 6.

நாள் 6

2. கிதியோனின் சரித்திரம் நியா. அதி. 6, 7.

A. **இஸ்ரவேலர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ததால் மீதியானியரின் (சவக்கடலின் கீழ் பாகத்திலுள்ளவர்) கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். நியா 6 : 1, 2 இஸ்ரவேலர் மீதியானியரின் பணிவிடைக்காரர்களாக்கப்பட்டனர் நியா 6 : 3—10.**

B. **கிதியோன் இஸ்ரவேலரை மீதியானியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டான். நியா 6 : 11.**

(1) கிதியோனுக்கு கடவுளின் அழைப்பு.

(a) கிதியோன் அழைப்பைப் பெறும்போது கோதுமையைப் போரடித்துக்கொண்டிருத்தல். நியா 6 : 11—16.

(b) அழைப்பை உறுதிப்படுத்த ஆண்டவர் கொடுத்த அடையாளங்கள். 6 : 17—23.

(c) பாகாலின் பலிபீடங்கள் தகர்க்கப்படவேண்டும். நியா. 6 : 25—32.

(d) கிதியோன் பெரிய சேனையை சேர்த்தல். 6 : 33—35.

(e) கிதியோனின் தோல் பரீட்சை 6 : 36—40.

(2) யுத்தத்திற்கு ஆயத்தம் 7 : 1—15.
கிதியோனின் முந்நூறு பேர்.

(3) மீதியானியர் மேல் ஜெயம் 7 : 16—25.

(a) ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் எக்காளம், ஓர் பானை, ஓர் தீவட்டி நியா. 7 : 16.

(b) கிதியோன் எக்காளம் ஊதும்போது, யாவரும் ஊதி, பானைகளை உடைத்தல். இடது கைகளில் தீவட்டி பிடித்தல். நியா. 7 : 18.

(c) மீதியானியர் ஓடிப்போகுதல். இஸ்ரவேலர் பின் தொடர்ந்து சங்கரித்தல் 7 : 23—25.

வாசிக்கவேண்டிய பாகம் நியா. 6, 7 அதிகாரங்கள்.

ஆலோசனைக்கான குறிப்புகள். நாள் 6

இஸ்ரவேலரின் பாளையத்திற்குள் சத்துரு புகுந்து, தோல்வி உண்டாக்க இடைவழி இல்லாதபடி ஒவ்வொருவரும் தன் தன் ஸ்தானத்தில் நின்றுகொண்டனர். தேவன் நம்மை வைத்திருக்கும் இடத்தில் நாம் நின்று, நம் வெளிச்சத்தை வீசப்பண்ணி, நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் எதிரிகளை முறியடிக்க வேண்டும்.

பூகோளக் குறிப்பு நாள் 6

(இடங்களைக்குறி)

1. இஸ்ரவேலருக்கு கிழக்கே மீதியானியர்களின் பகுதி.
2. கிதியோனின் சொந்த இடமாகிய மனாசேயிலுள்ள ஒப்ரா.
3. மீதியானியர்கள் கூடியிருந்த யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு.

"உன் வேதாகமத்தை அறிந்துகொள்" நாள் 6

1. கிதியோனின் சேனையில் இருந்தவர்கள் எத்தனை பேர்? நியா 7:7
2. மீதியானியர்களை கிதியோன் ஜெயித்தவிதம் என்ன? நியா 7 : 19-22
3. ஆண்டவருக்காய் நாம் செய்யும் காரியங்களில் ஆண்டவருடைய உதவி நமக்குண்டா?
4. தேவன் தான் தன்னோடு பேசினார் என்றும், தன் மூலமாய் இரட்சிப்பு கிடைக்கும் என்றும் அறிய கிதியோன் செய்த சோதனைகள் எவை? நியா 6 : 17-23, 36-40.

நாள் 7

3. சிம்சோனின் சரித்திரம். நியா 13-16 அதி.

குறிப்பு: சிம்சோனைப் பற்றிய வரலாற்றில் பல விஷயங்கள் அடங்கியிருப்பதால், அவையனைத்தையும் கற்றுக்கொடுப்பது முடியாத காரியம்.

A. **இஸ்ரவேலருக்குத் தென் கிழக்கிலுள்ள பெலிஸ்தியர் இஸ்ரவேலரைக் கொடுமைப்படுத்துதல். நியா 13 : 1**

B. **சிம்சோன் இஸ்ரவேலரை இரட்சிக்கிறவன் என்று தேவனால் அவன் பெற்றோருக்கு வெளிப்படுத்தப்படல் 13 : 5**

அவனுடைய பலம், தலைரோமத்தில் இருந்தது அதில் சவரகக்கத்தி படலாகாது

C. **சிம்சோனின் பிறப்பு : நியா 13 : 24**

(1) கர்த்தருடைய ஆவியானவரால் ஏவப்படுதல் : 13 : 25

(2) பெலிஸ்தியர் நாட்டிற்கு சமீபமான தாணில் பிறந்தான்.

D **சிம்சோன் பெலிஸ்திய ஸ்திரீயை விவாகம் செய்தல்**

(1) அவளைப்பார்க்கச் செல்லும் வழியில் ஆயுதமேதுமின்றி இரு கரங்களால் பாலசிங்கத்தைக் கொல்லுதல். இந்தப் பலம் தேவன் அருளினது. 14 : 5 - 7

(2) சிம்சோனின் விடுகதை :— மனைவியிடம் திரும்புதல்—சிங்கத்தின் எலும்புக்கூட்டில் தேனைக் கண்டது. கலியாண விருந்தில் போட்ட விடுகதை—பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது. நியா 14 : 14

(3) சிம்சோனின் மனைவி அவனிடம் இச்சகம் பேசி விடையைக் கேட்டு சிம்சோனின் எதிரிகளாகிய பெலிஸ்தியரிடம் கூறுதல்
(விடை. சிங்கத்திலிருந்து தேன்) நியா 14 : 16, 17

(4) சிம்சோன் தன் மனைவியைப் பார்க்க உத்தரவு கிடைக்காததால், பெலிஸ்தரின் வயல்களுக்குத் தீ வைத்தல் நியா 15 : 1-5

(a) இதனால் சிம்சோனின் மனைவியை அக்கினியால் சுட்டெரித்தல். 15 : 6

(b) பெலிஸ்தியர் சிம்சோனைப்பிடித்து இரு புதிய கயிறுகளால் இறுகக்கட்டுதல். 15 : 13

(c) சிம்சோன் கடவுளுடைய ஆவி பலமாய் இறங்கினதால் கயிறுகளை அறுத்தான். ஒரு கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றான். 15 : 14-16

LOGOS CHRISTIAN LIBRARY
Nagar
TIRUNELVELI

E. காசாவில் சிம்சோன் : நியா அதி 16

(1) பெலிஸ்தியர் சிம்சோனை அதிகாலேயில் கொல்ல பட்டண வாசலில் இரவு முழுவதும் பதிவிருத்தல். நியா 16 : 2

(2) காலையில் சிம்சோன் பட்டண வாசலைப் பெயர்த்து மலை உச்சிக்கு சுமந்து செல்லுதல். நியா 16 : 3

F. சிம்சோன் பலத்தை இழந்தல் :

(1) பெலிஸ்தியரின் சிநேகிதியாகிய தெலிலாளோடு சிநேகம். நியா 16 : 4.

(2) சிம்சோன், சாகத் தக்கதாய், ஆத்ம விசனமடைந்து "என் தலை சிரைக்கப்பட்டால் என் பலம் என்னை விட்டுப்போகும். மற்ற மனிதரைப் போலாவேன்" என்று அவன் கூறுமளவும் தெலிலாள் அவனை அலட்டி நயந்து பேசினுள். நியா 16 : 14-17.

தெலிலாள் சிம்சோன் தன் மடியில் நித்திரை செய்யும் போது தலையைச் சிரைத்து பெலிஸ்தியரைக் கூப்பிட்டாள். நியா 16 : 17-20

(3) பெலிஸ்தியர் அவனைக் கட்டி கண்களைப்பிடுங்கி காசாவில் சிறையிலே வைத்தார்கள். நியா 16 : 21 (சிறையிலே தலைமயிர் முளைக்கத் தொடங்கிற்று)

G. சிம்சோனின் மரணம் :

(1) பெலிஸ்தியர் சிம்சோனைத் தாகோனின் விக்கிரகத்தின் முன் நடைபெறும் விருந்துக்கு வேடிக்கை காட்டக் கொண்டுவரல். 16 : 23-26.

(2) சிம்சோன் கோவிலின் தூண்கள்மேல் சாய்ந்து கர்த்தர் தன்பலத்தை மறுபடியும் கொடுக்க ஜெபித்தல். நியா 16 : 28

(3) கர்த்தர் அவன் ஜெபத்திற்கு செவிசாய்த்தார். சிம்சோன் கோவில் இடிந்து விழுமளவும் தூண்களை அசைத்தான். சிம்சோனுேடு அங்கிருந்த யாவரும் சொல்லப்பட்டனர். நியா 16 : 29-31

வாசிக்க வேண்டிய பாகம் நியா 13, 16 அதிகாரங்கள்.

ஆலோசனைக்கான குறிப்புகள் நாள் 7

சிம்சோனுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய பெலத்தின் இரகசியத்தையும், முடி வெட்டப்பட்டபின் பெலத்தை இழந்ததையும், முடி வளர்ந்த போது திரும்பவும் பெலனைப் பெற்றுக் கொண்டதையும் காண்கிறோம். தேவனுக்கு எல்லாக் காரியத்திலும் பூரணமாகக் கீழ்ப்படிவதே ஆவிக்குரிய வல்லமையின் இரகசியம். நாம் உலகத்தோடு ஒத்து ஜீவித்து தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கும்போது அந்த வல்லமையில் குறைவுபட்டு இறுதியில் முழுவதுமாக வல்லமையற்றவர்களாகிறோம். ஆனல் மறுபடியும் அவரோடு நடக்கும்போது அவர் திரும்பவும் நம்மை பெலப்படுத்துகிறார். நாம் நம் தேவனோடு நெருங்கி ஜீவித்து நமக்கு அவர் அளித்த வல்லமையை இழந்து போகாதிருப்போமாக.

பூகோளப்பாடம் **நாள் 7**

(இடங்களைக் குறி)

1. சிம்சோனின் வம்சமான் தாண் பகுதி
2. பெலிஸ்தியர் நாடு
3. பெலிஸ்தியர் நாட்டிலுள்ள 'காசா' வைக் குறி.

"உன் வேதாகமத்தை அறிந்து கொள்" **நாள் 7**

1. சிம்சோனை எதற்காக நினைவு கூறுகிறோம்?
2. அவனுடைய பலத்தின் இரகசியம் என்ன?
3. அந்த பலம் சிம்சோனுக்கு எதற்காகக் கொடுக்கப்பட்டது? நியா 13 : 5
4. சிம்சோன் செய்த தவறுகள் எவை?

நாள் 8, 9.

4. ரூத்தின் சரித்திரம்.

குறிப்பு :- ரூத்தின் சரித்திரம் நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்தது. ஒருவேளை முதல் பாகத்தில் நடந்திருக்கலாம்.

A எலிமெலக்குவும் அவனுடைய மனைவியும் பஞ்சத்தின் பொருட்டு கானானை விட்டு மோவாபுக்குச் செல்லுதல். ரூத். 1 : 1-5

(1) எலிமெலேக்குவின் மரணம். ரூத். 1 : 3

(2) நகோமியின் குமாரர் மோவாபிய ஸ்திரிகளை விவாகம் செய்தல் ரூத் 1 : 4

(3) மக்களின் மரணம். (ரூத் 1 : 5)

B நகோமி பஞ்சம் நீங்கிய பத்து வருஷங்களுக்குப்பின் பெத்லகேமுக்குத் திரும்புதல். ரூத். 1 : 6-22

(1) மருமக்கள்மாரை மோவாபிலேயே தங்கச் சொல்லுதல் ரூத். 1 : 8-10

(2) ஓர்பாள் மோவாபிலேயே தங்கியிருத்தல். ரூத். 1 : 14.

(3) ரூத் நகோமியோடே செல்லுதல். ரூத். 1 : 15-17

(4) வாற் கோதுமை அறுப்புக்கால துவக்கத்தில் பெத்லகேம் வருதல். ரூத். 1 : 22

C. ரூத், நகோமியின் இனத்தானை போவாசை சந்தித்தல் ரூத். 2 : 1-4 : 13

(1) நகோமியிடம் கேட்டுக்கொண்டு ரூத் கதிர் பொறுக்கப் போகுதல். கதிர் பொறுக்குதல் என்றால் வயலில் கதிர் அறுக்கிறவர்கள் விட்டுப்போன தானியங்களைப் பொறுக்குவதாகும். சொந்த

வயலில்லாத ஏழைகள்தான் கதிர் பொறுக்குவார்கள். அவர்கள் அதிக மாகப் பொறுக்க முடியாது. ஆனாலும் கதிர் அறுப்போர் சில தானியங் களை அவர்களுக்காக விட்டுச் செல்வர். இது மோசேயின் மூலம் தேவன் கொடுத்த கற்பனை ஆகும்.

(2) ரூத்திற்கு போவாசின் இரக்கம். ரூத். 2 : 8-23

[a] நகோமிக்கு ரூத் காட்டின அன்பிற்காக ஆண்டவர் அவ ளுக்கு நன்மை செய்தார். ரூத் 2 : 11, 12

குறிப்பு :— மோவாபியரின் விக்கிரகங்களை விட்டுவிட்டு ஜீவ னுள்ள தேவனுடைய தேசத்தில் வாழுவதை ரூத் தெரிந்துகொண்டாள்.

[b] ரூத் கதிர் அறுப்பவர்களோடே போஜன பானம் பண்ண அனுமதி கிடைத்தல். ரூத். 2 : 14-16

[c] அறுப்புக்கால முழுவதும் கதிர் பொறுக்க அனுமதி. ரூத். 2 : 23

(3) போவாஸ் கதிர் தூற்றினது—ரூத் அவனை சந்தித்தது— அவனது அன்பைப் பெற்றது. ரூத். 3 : 6-15

[a] போவாஸ் கொடுத்த மாறுத்தரம். ரூத். 3 : 11-13 நீதியும், குணசாலியுமான அந்த ஸ்திரிக்கு எல்லா உதவிகளையும் செய்ய நிச்சயித்தான்.

[b] அவளுக்கு ஆறுபடி வாற்கோதுமை கொடுத்தான். ரூத். 3 : 15

ரூத்தும் போவாசும் விவாகம் செய்தல். ரூத். 4 : 13
போவாஸ் பட்டண வாசலில் மூப்பர்களை வரவழைத்து தன் விவாகத்தை விவரித்தல்.

D ஓபேத்தின் பிறப்பு (இவன் தாவீதின் தாத்தா. கிறிஸ்து பிறந்த வம்ச வழி) ரூத் 4 : 17.

வாசிக்க வேண்டிய பாகம்—ரூத் 1ம் அதி.

ஆலோசனைக்கான குறிப்புகள். **நாள் 8, 9**

மோவாப் யூதர்களால் வெறுக்கப்பட்ட தேசம். நகோமியும், அவள் குடும்பத்தாரும் பஞ்சத்திற்கும் கஷ்டத்திற்கும் தப்புவதற்காக அங்கு சென்றனர். துன்பத்திற்குத் தப்பி ஓடுவதினால் அதினின்று விடுதலைய டைய முடியாது. தேவனிடம் செல்வதற்குப் பதிலாக அவர்கள் அந்நிய தேசத்திற்குச் சென்றார்கள். தேவனை விட்டு தூரமாகப் போவது மனச் சோர்பு, துக்கம், மரணம் இவைகளையே உண்டாக்கும். தேவனண்டை சேர்வது சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் உண்டாக்கும்.

பூகோளப் பாடம் **நாள் 8 & 9**

மோவாபையும், பெத்லகேமையும் குறிப்பிடுக.

உன் வேதாகமத்தை அறிந்துகொள் நாள் 8, 9

1. ரூத் எந்நாட்டாள்? ரூத் 1 : 4
2. நகோமியுடன் ரூத் புறப்பட்டபோது சொன்னது என்ன? ரூத் 1 : 16, 17
3. ரூத்திற்குக் கிடைத்த வெகுமதி என்ன? (இயேசுவின் முன் மாதாவாகும் சிலாக்கியம். மத்தேயு 1 : 5)
4. ரூத் ஜீவித்த காலம் எது? (நியாயாதிபதிகளின் காலம்)

நாள் 10 சாமுவேலின் சரித்திரம்

A. சாமுவேலின் பிறப்பு

(1) அன்னாள் ஓர் குமாரனுக்காக ஜெபித்தல் I சாமு 1 : 10-19

(2) அன்னாளின் ஜெபம் கேட்கப்பட்டது. சாமுவேலின் பிறப்பு I சாமு 1 : 20

(3) அன்னாள் தனது வாக்கின்படியே சாமுவேலை ஆலயத்தில் கொண்டுவிடுதல். 1 சாமு 1 : 24

B. தேவாலயத்தில் சாமுவேல்

குறிப்பு :- இஸ்ரவேலர் கானானை ஜெயித்த பிறகு வனாந்தரத்திலே கட்டப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியானது சீலோவின் தேவாலயத்திலே வைக்கப்பட்டது. அங்குதான் ஆசாரியர் வசித்தனர். கடவுளுக்கு சர்வாங்க தகன பலிகளைச் செலுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் ஆசாரியர்கள் யாவரும் பரிசுத்தராயிருக்கவில்லை. சில சமயங்களில் அக்கிரமங்கள் செய்தனர். அப்படிப்பட்டவர்கள்தான் ஏலியின் மக்கள்.

(1) சாமுவேலின் அழைப்பு :- I சாமு 3-ம் அதி

கடவுளின் தீர்க்கதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்படல் (இவ்விடத்தில் தீர்க்கதரிசிக்கும், நியாயாதிபதிக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கு.)

(2) பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துச் சென்று தங்களுடைய நகரிலே ஒரு விக்கிரக ஆலயத்தில் வைத்தல் 1 சாமு 4-ம் அதி.

(a) ஏலியின் மரணம். I சாமு 4 : 18

(b) உடன்படிக்கைப் பெட்டி பெலிஸ்தருக்குச் சாபம். 1 சாமு 5-ம் அதி.

(c) பெலிஸ்தியர் உடன்படிக்கைப் பெட்டியை இஸ்ரவேலருக்குத் திரும்ப அனுப்புதல் 1 சாமு 6
பெட்டி கீரியாத் யாரீமில் அநேக வருஷங்கள் இருத்தல் 1 சாமு 5-ம் அதி.

(3) சாமுவேல், ஒரு தீர்க்கதரிசி, ஆசாரியன், நியாயாதிபதி.
1 சாமு 7, 8-ம் அதி.

ஒருவேளை அடுத்தபடியாக நியாயாதிபதியாக வரப்போகும் சாமுவேலின் குமாரரின் அக்கிரமத்தினிமித்தம், இஸ்ரவேலர் மற்றவர்களைப் போல ராஜா வேண்டும் எனல். 1 சாமு 8 : 1—5.

(a) சாமுவேல் இதை விரும்பாமல் கர்த்தரிடம் என்ன செய்ய எனக் கேட்டல். 1 சாமு 8 : 6

(b) அவர்களுக்கு ராஜா வேண்டுமெனக் கர்த்தர் கூறல் 1 சாமு 8 : 7

குறிப்பு:- சாமுவேலின் ஜீவியத்தில் மீதிப்பாகம், சவுலின் ஜீவியத்தோடு அடுத்த வருஷப்பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாசிக்கவேண்டிய பாகம். 1 சாமு 1, 3, அதிகாரங்கள்

ஆலோசனைக்கான குறிப்புகள் நாள் 10

சாமுவேல் சிறுவனுயிருக்கும்பொழுதே கர்த்தர் அவனோடு பேசினார். கர்த்தர் தமக்குச் செவி கொடுக்காதவர்களிடத்திலும் பேசுகிறார். சாமுவேலோ அவருக்குச் செவி கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிந்தான். நாம் "கர்த்தாவே, சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சொல்வோமா?

பூகோளப் பாடம் நாள் 10

(இடங்களைக் குறிப்பிடு)

சீலோ, ராமா.

உன் வேதாகமத்தை அறிந்து கொள் நாள் 10

1. தன்னுடைய விண்ணப்பத்திற்கிணங்கி கர்த்தர் தனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தால் அவனை என்ன செய்வதாக அன்னாள் வாக்களித்தாள்? 1 சாமு 1 : 11
2. வாக்குப்படி செய்தாளா? 1 சாமு 1 : 27, 28
3. சாமுவேல் பிள்ளையாண்டானுக்கு கொடுக்கப்பட்ட வேலை என்ன? 1 சாமு 2 : 18.

மனப்பாடம்

(ஆசிரியர் அன்றன்றைக்குரிய மனப்பாட வசனங்களை விளக்கிக் காட்டி, வசனம் இருக்குமிடத்தோடு, கற்றுவரச்செய்யவேண்டும். ஆசிரியர் மனப்பாட வசனங்களைப் பிள்ளைகளிடமிருந்து கேட்கப்போதுமான நேரமிருக்குமே தவிர, படிக்கச்செய்ய நேரமிருக்காது. ஆதலால் பிள்ளைகளை வெளிநேரத்தில் படித்து வரச் செய்யவும்.)

நாள்	வசனம்
1	யாத் 20 : 3 - 6
2	யாத் 20 : 7—10
3	யாத் 20 : 11—13
4	யாத் 20 : 14—17
5	யோ 3 : 1—4
6	யோ 3 : 5—7
7	யோ 3 : 8—11
8	யோ 3 : 12—14
9	யோ 3 : 15—18
10	யோ 3 : 19—21

இரண்டாம் வகுப்பு (2nd Period) நேரத்தில் கற்றுக்கொடுப்பவை

நாள் 1 வெவ்வேறு காலங்களும், ஏற்பாடுகளும் (Dispensations)

வேதாகம சரித்திர வகுப்பின் அறிவு வளர்ச்சியின் விளைவாக காலக்கிரம விபரங்களின் படிப்பு இருக்கவேண்டும். வெவ்வேறு காலங்களாவது ஆண்டவர் மனிதனை ஒவ்வொரு காலமும், அவன் தனக்குக் கீழ்ப்படிந்து தன்னைக் கனப்படுத்தும்படி விசேஷித்த வழிகளைக் கையாண்ட காலமாகும்.

மனிதனின் சிருஷ்டிப்புக்கு முன், பூமி சிருஷ்டிக்கப்பட்டபின் (ஆதி 1 : 2) சாத்தான் பூமிக்குத் தள்ளப்பட்ட சம்பவம் நடந்ததாக நம்பப்படுகின்றது. லூஸிபர், பிரதான தேவதூதனைப் பரலோகத்தில் இருந்தவன். தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்தான். பெருமையே இதற்குக் காரணம். அதன்பயனாக லூஸிபர் அல்லது சாத்தான் என்பவன் மோட்சத்திலிருந்து தள்ளப்பட்டான். (ஏசாயா 14 : 12—15).

தேவன் ஏழு வெவ்வேறு காலக்கிரமங்களின்படி மனிதனை நடத்துகிறார். 5 காலங்கள் கடந்து விட்டன. நாம் ஒரு காலத்திற்குள் இருக்கிறோம். இன்னொரு காலம் வரப்போகிறது. காலங்களாவன: களங்கமற்ற காலம், மனசாட்சியின் காலம், மனித ஆட்சியின் காலம், வாக்குத்தத்தத்தின் காலம், நியாயப்பிரமாணத்தின் காலம், கிருபையின் காலம் அல்லது பரிசுத்தாவியின் காலம், தேவனுடைய ராஜயம் அல்லது ஆயிர வருஷ கால அரசாட்சி. ஒவ்வொரு காலத்திலும், மனிதனுக்கு ஒரு பரீட்சை, ஒரு நியாயத்தீர்ப்பு அல்லது பலன் உண்டு.

(பின்வரும் குறிப்புகளை ஆசிரியர் விபரமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும்)

I. களங்கமற்ற காலம் : ஆதி 1 : 1—3 : 22.

1. காலம்—சிருஷ்டிப்பிலிருந்து மனுஷன் ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்தப்பட்டவரையுள்ள காலம். திட்டமல்ல.

2. மக்கள்—ஆதாமும் ஏவாளும்
3. பரீட்சை—மரத்தின் கனியைப் புசிக்கலாகாது
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—மரணம்—சரீர ஆத்ம மரணம்
6. வாக்குத்தத்தம்—ரட்சகர். ஆதி 3 : 15

மனிதன் கலங்கமற்றவனாக பரிசுத்தமான சூழ்நிலையில் சிருஷ்டிக்கப்பட்டான். ஸ்திரியானவள் பெருமையினால் விழுந்தாள். மனிதன் அவளுக்கு செவி சாய்த்து துணிகரமாய் விழுந்தான்.

நாள் 2

II. மனச்சாட்சியின் காலம் : ஆதி3 : 22—9 : 17

1. காலம்—துரத்தப்பட்டதிலிருந்து ஜலப்பிரளயம் வரை (1656 வருஷம்)
2. மக்கள்—நோவாவின் குடும்பம்.
3. பரீட்சை – மனச்சாட்சிக்குக் கீழ்படிதல்
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—ஜலப்பிரளயம்
6. வாக்குத்தத்தம்—பூமியானது வெள்ளத்தினால் இனி அழிக்கப்படாது ஆதி. 9 : 11—13

வானவில் உடன்படிக்கையின் அடையாளம்

இக்கால மக்கள் நன்மை எது தீமை எது என அறிவார்கள். நன்மை புரிவது தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்றும், தீமை செய்வது தேவனுக்குக் கீழ்படியாமை எனவும் அறிவார்கள். தேவனுடைய சித்தம் எச்சரிக்கையாக வெளிப்படுத்தப்பட்டது.

நாள் 3

III. மனித ஆட்சி : ஆதி 9 18—11 : 9

1. காலம்—ஜலப்பிரளயத்திலிருந்து பாபேல் வரை. 427 வருஷம்
2. மக்கள்—நோவாவின் சந்ததிகள்
3. பரீட்சை—மனிதன் தன்னைத்தான் ஆளும் திறமை
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—பாஷை மாறுட்டம்

இது மனிதனை மனிதனே ஆண்ட காலம். மனிதன் தெய்வத்துக்காக இவ்வுலகத்தை ஆளும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் கடவுளுக்காக அல்ல, தங்களுக்காக ஆண்டார்கள். அவர்கள் தாங்கள் நற்புகழ் அடைய விரும்பினர்.

நாள் 4

IV. வாக்குத்தத்தத்தின் காலம் : ஆதி 12 : 1—யாத் 1 : 8

1. காலம்—ஆபிரகாமின் அழைப்பிலிருந்து எகிப்தின் அடிமைத் தனம் வரை 430 வருஷம்
2. மக்கள்—ஆபிரகாமும் அவன் பின் சந்ததியாரும்
3. பரீட்சை—தேவனின் வாக்குத்தத்தத்தில் விசுவாசம்
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—எகிப்தில்பட்ட துன்பம், நிர்ப்பந்தம்
6. வாக்குத்தத்தம்—ரட்சகர்

உடன்படிக்கையானது கிருபை நிறைந்ததாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்கிறது. அவர்கள் தங்களுடைய சொந்த தேசத்திலே மட்டும் வசிக்கவேண்டியதிருந்தது. அவர்கள் எகிப்துக்குச் சென்றபோதே தங்கள் ஆசீர்வாதங்களை இழந்தார்கள்.

நாள் 5

V. நியாயப் பிரமாணத்தின் காலம் : யாத். 20ம் அதி முதல் அப்போஸ்தலர் 1ம் அதிகாரம் வரை.

1. காலம்—சீனாய் மலையிலிருந்து சிலுவை வரை 1600 வருஷம்
2. மக்கள்—இஸ்ரவேல் ஜனங்கள்
3. பரீட்சை—கற்பனைகளுக்குக் கீழ்ப்படிதல்
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—பலவிடங்களுக்கும் சிதறப்பட்டுப் போகுதல்
6. வாக்குத்தத்தம்—மேசியா

தேசத்தை கற்பனைகளினால் பரீட்சித்தல், அடிமைத்தனங்களின் நியாயத் தீர்ப்போடு முடிவடைந்தது. ஆனால் நியாயப் பிரமாணத்தின் காலம் சிலுவையில் முடிந்தது.

நாள் 6

VI. கிருபையின் காலம் அல்லது பரிசுத்தாவியின் காலம் : அப். 2ம் அதி. முதல் வெளிப்படுத்தல் வரை

1. காலம் : சிலுவையிலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1900+பலவருடங்கள்)

2. மக்கள்—தற்கால ஜனங்கள் யாவரும்
3. பரீட்சை—கிறிஸ்துவின் ரத்தத்தைப் பாவநிவிர்த்தியாக விசுவாசிக்கிறதும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுதலும்.
4. விளைவு—மனிதனின் தோல்வி
5. தண்டனை—கிறிஸ்துவை மறுதலிக்கிறவர் அழிந்து போவர். பலன்—கிறிஸ்து அவரை விசுவாசிக்கிறவர்களுக்காக வருகிறார்.
6. வாக்குத்தத்தம்—கிறிஸ்துவோடு ஆளுகை.

நாள் 7

கிருபையின் காலத்திற்கும், கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு கூட ஆகாயத்திலிருந்து வந்து செய்யும் ஆயிர வருஷ அரசாட்சியின் காலத்திற்கும் இடையே நடக்கும் பெரிய நிகழ்ச்சிகள்.

1. பரிசுத்தவான்களுடைய உயிர்த்தெழுதலும், உயர எடுத்துக் கொள்ளப்படுதலும் அப்பொழுது நடக்கும். I தெசலோ. 4 : 16, 17, வெளி 20 : 6.
2. ஏழு வருஷம் நீடிக்கும் உபத்திரவம். மத். 24 : 21.
3. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து. வெளி. 19 : 6–8 (இது பரலோகத்திலுள்ள பரிசுத்தவானகளுக்கு நடக்கும்)
4. உபத்திரவ நாட்களில் ரட்சிக்கப்பட்டவர்களின் உயிர்த்தெழுதல் வெளி 20 : 4

நாள் 8

VII. தேவராஜ்யம் அல்லது ஆயிர வருஷ அரசாட்சி :—

வெளிப்படுத்தலும், தீர்க்கதரிசனப் புத்தகங்களும்.

பரிசுத்தவான்களோடுகூட பூமியிலே ஆயிர வருட அரசாட்சி செய்ய இயேசு தாமே மகிமையிலே வெளிப்படுவார்.

1. காலம்—ஆயிரம் வருஷம்
2. மக்கள்—உயிரோடிருக்கும் சகலரும், பரிசுத்தவான்களும்
3. பரீட்சை—"ஒவ்வொரு முழங்காலும் கிறிஸ்துவிற்கு முன் முடங்கும்".

ஆயிர வருஷ அரசாட்சியின் ஒழுங்குகள் :— ஓசியா. 2:18—23; ஏசாயா. 65 : 17—25; 11 : 6—12; வெளி. 20 : 4

நாள் 9

1. ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பின்பு மரித்த நன்மார்க்கர் உயிர்த்தெழும்புதல். வெளி 20 : 5.
2. வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு. வெளி 20 : 11—15
3. ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள், அக்கினிக் கடலுக்குள் போகுதல். வெளி 20 : 3, 7, 10, 15
4. ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள், புதிய வானத்தையும், புதிய பூமியையும் சுதந்தரிப்பார்கள்.
   வெளி 21 : 1—27, 22 : 1—7.

நாள் 10

மாணவர் தாங்கள் ஒவ்வொருநாளும் கற்றுக்கொண்டவைகளை, இந்த நாளில், கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி படத்தைப் போல (Chart) வரைய வேண்டும். ஆசிரியர் இதைப் போல பெரிய படம் ஒன்று தயாரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு காலத்திற்கும், ஒவ்வொரு வட்டத்தையும் அதனதன் கால அளவுக்குத் தக்கதாக வரையலாம். முதல் வட்டம் திட்டமான கால அளவு தெரியாது என்பதைக் காட்ட அரை வட்டமாக வரையலாம். நரகத்தை படத்தின் அடிப்பாகத்திலும் மோட்சத்தை மேல் பாகத்திலும் காட்டலாம். கோடுகளும் அம்புக்குறிகளும் பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது, மற்றவர்கள் நரகத்திற்குப் போகிறது, முதலியவைகளைக் காட்டுகிறது. ஒவ்வொரு வட்டத்திற்கு மிடையே கோடிட்டு ஒவ்வொரு காலத்தின் முடிவிலும் கிடைத்த தண்டனையைக் காட்டலாம்.

பிரிக்கப்பட்ட இராஜ்யம்



இஸ்ரவேல், யூதாவின்
இராஜாக்கள், தீர்க்கதரிசிகளின் அட்டவணை



சீனியர் வகுப்பினர் (Senior) ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகள்

இரண்டாம் வருடப் பாடத்திட்டம்

பழைய ஏற்பாட்டு சரித்திரமும் பூகோளமும்

(சவுல் முதல் கிறிஸ்து வரை)

பின்வரும் பாடங்கள் பழைய ஏற்பாட்டு சரித்திரத்திற்கும் பூகோளத்திற்கும் முகவுரை ஆகும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் ஆசிரியர்களின் உபயோகத்திற்கென்றே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்குக் களைப்பூட்டும் முறையில் நீண்ட உபந்நியாசங்கள் செய்யாமல் பழைய ஏற்பாடு, சரித்திர சம்பந்தமான இடங்களில் வாழ்ந்த ஆண் பெண் பிள்ளைகளின் உண்மையான வாழ்க்கை வரலாறு அடங்கிய ஒரு புத்தகம் என்பதை ஆசிரியர் உணர்த்துவது அவர்கள் கடமையாகும். அது பல சரித்திரம், சம்பவங்களின் தொகுப்பு அல்ல, ஒன்றோடொன்று சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் என்பதையும் தெளிவு படுத்தவேண்டும்.

பழைய ஏற்பாட்டின் சரித்திரம் எளிதாய் விளங்கும்படி 14 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருடத்திற்கு சவுல் ராஜா முதல் மேசியாவாகிய கிறிஸ்துவின் காலம் வரை உள்ள 4 பகுதிகள் (11—14).

ஒரு மாணவன் 3 வருடங்கள் இத்திட்டத்தின்படி படித்து முடித்தால் பழைய ஏற்பாட்டின் வரிசைக்கிரமமான சம்பவங்களையும் அந்த சம்பவங்கள் என்ன என்பதையும் அவை எங்கே நடந்தன என்பதையும் பற்றிய ஒரு பொதுவான அறிவைப்பெறுகிறான்.

மாணவர்கள் தங்கள் வேதாகமங்களிலிருந்து எல்லா சரித்திரங்களையும் வாசிப்பதற்கு சமயம் போதாது. மாணவர்கள் தங்கள் சொந்த நேரத்தில் ஆலோசனைக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் பாகத்தை வாசிக்கலாம்.

மாணவர்கள் வகுப்பில் கற்றுக்கொண்ட பாடங்களிலுள்ள இடங்களைக் குறிக்கும்படியாக ஒவ்வொருவருக்கும் பழைய ஏற்பாட்டு தேசப்படங்கள் கொடுக்கப்படவேண்டும். மாணவர்களுக்குத் தேசப்படத்தில் இடங்களைக் குறிக்க உதவி செய்யத் தக்கவாறு ஆசிரியர் முன்னதாகவே வேதாகமத் தேசப்படததை வைத்து ஆயத்தம் செய்து வரவேண்டும்.

முக்கிய குறிப்பு: ஒவ்வொரு நாள் பாடத்தின் தலைப்பில் நாள் 1, நாள் 2, நாள் 3 etc. காணலாம்.

11-ம் பகுதி சவுல், தாவீது, சாலொமோன் என்ற மூவர் கீழ் உள்ள ஐக்கிய ராஜ்யம்.

12-ம் பகுதி இஸ்ரவேல் ராஜ்யம், யூத ராஜ்யம் என்ற பிரிந்த ராஜ்யம்.

13-ம் பகுதி சிறை யிருப்பு.

14-ம் பகுதி சிறை திரும்புதல்.

XI. **பகுதி 11**

சவுல், தாவீது, சாலொமோன் என்பவர்களின் கீழ் ஐக்கிய ராஜ்யம்

நாள் 1

A. சவுல், முதல் ராஜா. (பின்வரும் வேதபாகங்கள் சாமுவேலின் முதலாம் புஸ்தகத்தில் உள்ளன.)

1. சவுலின் நல்ல ஆரம்பம்.
   - (a) தேவனால் தெரிந்தெடுக்கப்படுதல். (1 சாமு. 9 : 17)
   - (b) சாமுவேலினால் அபிஷேகம் செய்யப்படுதல். (10 : 1)
   - (c) மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுதல். (10 : 24; 11 : 15)
2. சவுலின் முதல் கீழ்ப்படியாமை.
   - (a) கர்த்தரது கட்டளையின்றிப் பலியிடுதல். (13 : 8—12)

     குறிப்பு: சாமுவேல் ஆசாரியனானபடியால் அவனே பலி செலுத்த வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மக்கள் ஆசாரியன் மூலம் தேவனிடம் வந்தனர். இப்பொழுது நமது பிரதான ஆசாரியாகிய இயேசுகிறிஸ்து மூலம் தேவனிடம் நாம் வருகின்றோம்.
   - (b) அவனது ராஜ்யம் அடுத்தவருக்குக் கொடுக்கப்படும் என்று சாமுவேலின் மூலம் அறிவிக்கப்படுதல். (13 : 13, 14)
3. சவுலின் யுத்தம்

   பெலிஸ்தியரோடு அவனது காலமெல்லாம் யுத்தம் (14 : 52)
4. சவுலின் பொறாமை
   - (a) தாவீதைச் சுரமண்டலம் வாசிக்கக்கேட்டல். (16 : 22,23)
   - (b) கோலியாத்தைக் கொல்லத் தாவீதுக்கு அனுமதி கொடுத்தல். (17 : 37)
   - (c) தாவீதைப் புகழ்ந்த போது சினமடைதல் (18 : 6—9)
   - (d) தாவீதைச் சிநேகித்தபடியால் யோனத்தானைச் சபித்தல். (20 : 30, 31)
5. சவுலின் துக்கமான முடிவு
   - (a) தாவீதைக் கொல்ல பின் தொடர்தல் (23 : 24-26; 24 : 1, 2; 26 : 1-3)
   - (b) சவுல் உயிரைத் தாவீது காப்பாற்றல். (24 : 4-12, 26 : 6-12)
   - (c) யுத்தத்தில் மரணமடைதல். (31 : 2-6)

வாசிக்கவேண்டிய பாகம்:- சவுலின் வாழ்க்கை 1 சாமு. 17 அதி,18 அதி.

(1)	சவுலின் முதல் கீழ்ப்படியாமை	(I சாமு 13 : 8—14)
(2)	அவனுடைய மதியீனம்	(,, 14 : 19—32)
(3)	இரண்டாவது கீழ்ப்படியாமை	(,, 15
(4)	பாவத்தினால் உண்டான தனிமை	(,, 28 : 15—19)

ஆலோசனைக்கான குறிப்புகள். **நாள் 1**

(1 சாமு. 15) சவுல் ஆகாக் அரசனைக்கொல்ல மறுத்ததினால் கர்த்தருக்குக் கீழ்படியாமல் போனான். எனவே கர்த்தர் இராஜ்யத்தை அவனிடமிருந்து பிடுங்கி தாவீதுக்குக் கொடுத்தார். கீழ்ப்படியாமைக்குத் தண்டனை உடனடியாகவோ, பின்போ கிடைக்கிறது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற காரியம் கீழ்ப்படிதலே.

பூகோளப் பாடம் **நாள் 1**

(இடங்களைக் குறிப்பிடு)

1. சாமுவேலின் ஊராகிய ராமா.
2. சவுலின் ஊரும், தலை நகரமுமாகிய கிபியா.
3. சவுலின் முக்கிய விரோதிகளான பெலிஸ்தியர் நாடு.
4. உப்புக்கடல் (சவக்கடல்), யோர்தான் நதி.

உன் வேதாகமத்தை அறிந்துகொள். **நாள் 1**

1. சவுலின் முதல் கீழ்ப்படியாமை யாது? 1 சாமு. 13 : 8—12
2. சவுல் தாவீதின் மேல் பொறாமைப்படக் காரணம் யாது? 1 சாமு. 13 : 13, 14; 18 : 6–9, 20 : 30, 31-
3. சவுலை ராஜாவாக, அபிஷேகம் பண்ணினது யார்? 1 சாமு 10 : 1-
4. சவுல் எப்படி மரித்தான்? 1 சாமு. 31 : 2-6

நாள் 2.

B. **மேய்ப்பனாகிய தாவீது ராஜா.** (பின்வரும் வேதபாகங்கள் சாமுவேலின் இரண்டாம் புஸ்தகத்தில் உள்ளன)

1. தாவீது ராஜ்யத்தை ஒன்று படுத்தினான்.

(a) எபிரோனில் தன் வீட்டில் யூதாவம்சத்தாரின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுதல். (2 சாமு. 2 : 1–4)

குறிப்பு: சவுலுக்குப் பயந்து தாவீது பெலிஸ்தியர் நாட்டிற்கு ஓடிப்போனான். அவன் அங்கிருக்கையில் பெலிஸ்தியர் இஸ்ரவேல் நாட்டின் மீது படையெடுத்து சவுலைக் கொன்றனர். சவுல் இறந்ததும் தேவன் தாவீதை எபிரோனுக்கு திரும்பும்படி சொல்லுதல்.

(b) சவுலின் குடும்பத்தை மேற்கொள்ளுதல். (3 : 1)

(c) இஸ்ரவேல் அனைவர்மீதும் ராஜாவாகுதல். (5 : 1-5)

(d) தலைநகரை எருசலேமுக்கு மாற்றல். (5 : 6-10)

2. தாவீது ராஜ்யத்தை ஏற்படுத்தல்.

(a) கர்த்தரது உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வருதல். (6 : 15, 17, 18).

குறிப்பு: இக்காலம், தேவன் அவர்களோடிருப்பதற்கு 'உடன் படிக்கைப் பெட்டி' ஒரு அடையாளமாயிருந்தது.

(b) தேவனுக்கு ஒரு தேவாலயத்தைக் கட்டவிரும்பினதும், அதற்கு தேவன் கொடுத்த பதிலும். (7 : 2, 4, 5)

(1) தீர்க்கதரிசியாகிய நாத்தான், சாலொமோன் ஆலயத்தைக் கட்டுவான் என்று முன்னறிவித்தல். (7 : 12, 13)

(2) மேலும் தாவீதின் சிங்காசனம் என்றும் நிலைபெறு மெனக் கூறுதல். (7 : 16)

(3) எல்லாச் சத்துருக்களையும் வெல்லுதல். (8 : 11-15)

(4) யோனத்தானுக்குக் கொடுத்த வாக்கின்படி மேவிபோசேத்துக்கு அன்பு காட்டுதல். (9 : 6, 7)

3. தாவீது பாவஞ் செய்வதும், மனந்திரும்புவதும் :-

(a) உரியாவைக் கொல்ல போருக்கனுப்புதல். (11 : 14-17)

(b) உரியாவின மனைவி பத்சேபாளைத் தன்மனைவியாக்குதல். (11 : 26, 27)

(c) தேவன் நாத்தான் மூலம் அவனைக் கண்டித்தல்.

(d) தன் பாவத்தினின்று மனந்திரும்புதல். (12 : 13)

4. தாவீதின் சங்கடமான காலங்கள்.

(a) அப்சலோமின் துரோகமும், மரணமும் துக்கத்தை யுண்டாக்குதல். (15 : 10-14; 18 : 14, 33)

(b) பஞ்சமும், யுத்தமும் நாட்டில் பரவுதல். (21 : 1-15)

(c) பாடுகளின் நடுவில் பாட்டுக்களைப் பாடுதல். (22 : 1-51)

குறிப்பு :- தாவீது "இஸ்ரவேலரின் மதுரகவி" என அழைக்கப்பெற்றான். பழைய ஏற்பாட்டிலுள்ள பல சங்கீதங்களை இவன் பாடினான்.

(d) போருக்குத் தன் ஜனங்களை எண்ணுதலும், தேவனிடமிருந்து கொள்ளை நோய் வருதலும். (24 : 10, 15)

5. தாவீதின் முதிர் வயது.

(a) சாலொமோனை ராஜாவாக்குதல். (1 இரா. 1:32-35)

(b) எப்படி ஆட்சி செய்யவேண்டுமென்று சாலொமோனுக்குப் புத்தி புகட்டல். (1 இரா. 2 : 1-4)

(c) நாற்பதாண்டு ஆளுகைக்குப் பின் இறத்தல்.
(1 இரா 2 : 10, 11)

வாசிக்க வேண்டிய பாகம் — தாவீதின் வாழ்க்கை.
II சாமு 12:1-23; 18 : 1-33.

ஆலோசனைக்கான குறிப்புகள் **நாள் 2**

தாவீதின் இருபெரும் பாவங்கள்.

1. 2 சாமு 11 : 2-27 உரியாவுக்கு விரோதமான பாவம்— தண்டனை — பிள்ளை மரித்தது.

2. ஜனங்களைக் கணக்கிட்டது. 2 சாமு 24 : 1-25 தண்டனை. 70,000 பேர் மரித்தனர்.

தாவீது பெருமையினால் ஜனங்களை எண்ணினான். கர்த்தரின் பார்வையில் பெருமை பெரிய பாவம் அது சாத்தானை மோட்சத்திலிருந்து கீழே விழப்பண்ணினது. தாவீதின் காலத்தில் 70,000 பேரைக் கொன்றது.

பூகோளப் பாடம் **நாள் 2**

1. தாவீதின் பிறந்த ஊராகிய பெத்லகேம்.
2. தாவீதின் முதல் தலைநகரமாகிய எபிரோன்.
3. கடைசியில் தாவீது ராஜா ஆட்சி புரிந்த மற்ற இஸ்ரவேலின் ராஜ்யம்.
4. ஐக்கிய ராஜ்யத்தின் தலைநகராகிய எருசலேம் என்ற "தாவீதின் நகர்."

உன் வேதாகமத்தை அறிந்துகொள் **நாள் 2**

1. எங்கே, யாரால் தாவீது ராஜாவாக்கப்பட்டான்? 2 சாமு 2 : 1—4
2. அவனுடைய தலைநகரம் யாது? 2 சாமு 5 : 6-10
3. எந்தக் கட்டடத்தை அவன் கட்ட விரும்பியும் கர்த்தர் அதற்கு இடங்கொடுக்கவில்லை? 2 சாமு 7 : 2, 4, 5.
4. தாவீது எழுதின பாடல்கள் யாவை? சங்கீதம்
5. அப்சலோம், தாவீதுக்கு என்ன செய்தான்? 2 சாமு 15 : 10—14; 18 : 14, 33
6. தாவீது, தனக்குப்பின் யாரை ராஜாவாக ஏற்படுத்தினான்? 1 ராஜா 1 : 32-35

நாள் 3

C. **ஞானமுள்ள சாலொமோன் ராஜா.** (பின்வரும் வேதபாகங்கள் இராஜாக்களின் முதல் புஸ்தகத்தில் உள்ளன.)

1. சாலொமோன் ஞானத்தைத் தெரிந்து கொள்ளுதல்.
(1 ராஜா 3 : 5-15; 4 : 29-34)

2 சாலொமோன் தேவாலயத்தைக் கட்டுதல்.

(a) கட்டத் தீர்மானித்தல். (5 : 1-5; 6 : 1)

(b) ஆலயத்தை முடித்தல். (7 : 51)

(c) உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்திற்குள் கொண்டு வருதல். (8 : 4)

(d) ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தல். (8 : 10, 11, 22-29, 65, 66)

3. சாலொமோன் தேவனோடு உடன்படிக்கை செய்தல். (9 : 4-9)

4. சாலொமோனின் கீர்த்தி. (10 : 1-13)

5. சாலொமோனின் விக்கிரக வணக்கப் பாவம். (11 : 4, 9, 10)

6. சாலொமோனது தண்டனை. (11 : 11-13, 28-32)

7. சாலொமோனின் மரணம். (11 : 42, 43)

வாசிக்க வேண்டிய பாகம்.

சாலொமோன் வாழ்க்கை I ராஜாக்கள். (3 : 16-28; 10 : 1-13)

பகுதி 12

XII. இஸ்ரவேல், யூதா என்ற பிரிந்த ராஜ்யங்கள்.

A. ராஜ்யத்தின் பிரிவுகள்.

1. மதிகெட்ட ரேகொபெயாம் மன்னன்

(a) தன் தகப்பன் சாலொமோனுக்குப் பின் அரசனானன். (1 ரா 11 : 43)

(b) 10 கோத்திரங்களையும் இலகுவாக நடத்த யெரொபெயாம் கேட்டான். (12 : 3, 4)

(c) வாலிபரின் அறிவீன ஆலோசனையைக் கேட்டான். (12 : 6-11)

(d) கடுமையான உத்தரவு கூறினமையால் 10 கோத்திரங்களை இழந்தான். (12 : 12 — 19)

(1) யூதா. பென்யமின் என்ற இரு கோத்திரமும் ரெகொபெயாமுக்கு உண்மையாயிருந்தனர். (12 : 21)

(2) வடபாக 10 கோத்திரங்களும் யெரொபெயாமைப் பின்பற்றினர். (12 : 20)

B. இஸ்ரவேல் ராஜ்யம்

குறிப்பு :- வடக்கிலுள்ள 10 கோத்திரங்களடங்கிய இந்த ராஜ்ஜியம் 259 வருஷங்களாக நீடித்திருந்தது. அக்காலங்களில் 9 வெவ்வேறு குடும்பத்திலுள்ள 19 பொல்லாத அரசர் ஆண்டனர். விக்கிரக வணக்கம் அதிகரித்தது. தேவனிடம் திரும்பவேயில்லை.

1 இஸ்ரவேலின் முதல் அரசன் யெரோபெயாம்.

(a) கர்த்தரிடமிருந்து வாக்கைப் பெற்றான். (1 ராஜா 11 : 38)

(b) சீகேமைத் தன் தலைநகராக்கினான். (12 : 25)

(c) தேவனுக்குக்கொடுத்த தன் வாக்கை மறந்தான் (12: 26-33)

குறிப்பு :- வடபாகத்திலுள்ள கோத்திரத்தார் எருசலேமில் தேவனை ஆராதிக்கச் செல்லுவார்களேயானால் யூதாராஜ்யத்தோடு சேருவர் என்று பயந்தான். ஆகையால் தெற்கே பெத்தேலில் ஒரு பொன் கன்றுக்குட்டியையும், வடக்கே தாணில் ஒரு பொன் கன்றுக்குட்டியையும் வணங்கும்படி வைத்தான். (I இராஜா 12 : 29)

(d) 22ஆண்டு ஆட்சி செய்து இறந்தான். (14 : 20)

2 ஆகாப் 7வது ராஜா.

(a) சமாரியாவிலிருந்து ஆண்டான். (16 : 29)

(b) யேசபேலை மணந்தான். அவள் (பெனிக்கேய சீதோனிய நாட்டுப் பொல்லாத இளவரசி. (16 : 31)

(c) தன் மனைவியோடு இசைந்து பாகாலை வணங்கினான். (16 : 32, 33)

வாசிக்கவேண்டிய பாகம் (I இராஜா 12; 14 : 1-18)

ஆலோசனைக்கான குறிப்புகள் நாள் 3

சாலொமோன் கர்த்தரின் சித்தத்தைச் செய்ய ஞானத்தைத் தெரிந்துகொண்டான். "முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்." (மத். 6 : 33)

பூகோளப் பாடம் நாள் 3

(இடங்களைக் குறி)

1. சாலொமோன் ஆட்சிக்குக் கீழ்ப்பட்டு ராஜ்யத்தோடு சேர்ந்த சுற்றியுள்ள நாடு.
2. ஆலயத்தைக் கட்ட கேதுரு மரங்களை அனுப்பிய ஈராம் ராஜாவின் தீரு பட்டணம்.
3. யெரொபெயாமைப் பின் பற்றிய கோத்திரங்களின் இடங்கள்.
4. ரெகொபெயாமுக்கு உண்மையாயிருந்த தெற்கு கோத்திரத்தாரின் இடங்கள்.
5. இஸ்ரவேலின் முதல் தலைநகராகிய சீகேம்.
6. பொன் கன்றுகுட்டிகள் இருந்த தாண், பெத்தேல்.
7. யேசபேலின் தகப்பனாகிய எத்பாகாலின் நாடாகிய பெனிக்கியா
8. ஆகாபின் தலைநகராகிய சமாரியா.

' உன் வேதாகமத்தை அறிந்துகொள் " நாள் 3

1. சாலொமோன் எதைத் தெரிந்துகொண்டான்? 1 ராஜா 3 : 5—15.
2. சாலொமோன் எதைக் கட்டினுன்? 1 ராஜா 5 : 1-5; 6 : 1; 7 : 51.
3. சாலொமோனின் பாவம் யாது? 1 ராஜா 11 : 4, 9, 10.
4. அவனுக்குக் கிடைத்த தண்டனை யாது? 1 ராஜா 11 : 11-13. 29 – 32.
5. சாலொமோனுக்குப்பின் ராஜாவானது யார்? 1 ராஜா 11: 43.
6. எந்த இரண்டு கோத்திரங்கள் ரெகொபெயாமைப் பின்பற்றின? 1 ராஜா 12 : 21.
7. எந்த பத்துக் கோத்திரங்களும் யெரொபெயாமைப் பின் பற்றின? 1 ராஜா 12 : 20.

நாள் 4

(பின்வரும் வேதபாகங்கள் இராஜாக்களின் முதலாம் புஸ்தகத்தில் உள்ளன)

3. எலியா :- அச்சமற்ற ஆண்டவரது தீர்க்கதரிசி.

குறிப்பு :- ஆகாபிடமும் அவனது குடிகளிடமும், உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள் அல்லது அழிவீர்கள் என்ற தேவ எச்சரிப்பை எலியா அவர்களுக்கு அறிவித்தான். ஆகாப் ஆட்சியில் எலியா தோன்றினுன். ஆகாபின் மகன் யோராமின் ஆட்சியில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.

(a) பஞ்சத்தைப்பற்றி ஆகாபுக்கு முன்னறிவித்தான். (1 ராஜா 17 : 1)

(b) கேரீத் ஆற்றண்டையில் ஒளித்திருந்தபோது காகங்கள் அவனைப் போஷித்தன. (17 : 27)

(c) விதவை அவனைப் பராமரித்தாள். மரித்த அவள் மகனை உயிரோடு எழுப்பினுன். (17 : 9—24)

(d) கர்மேல் பர்வதத்தில் பாகால் தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரது வல்லமையைக் காண்பித்தான். (18 : 19—46)

(e) ஓரேப் (சீனுய்) வழியாக தமஸ்குவுக்குச் சென்றுன். (19 : 1—15)

(f) "என் பின்னே வா" என்று எலிசாவை அழைத்தான். (19 : 19—21)

(g) ஆகாப் மரணத்தைப்பற்றித் தீர்க்கத்தரிசனம் (21 : 17—26)

(h) ஆகாபின் மகனுகிய அகசியாவிடம் அவனது மரணத்தைப் பற்றிச் சொன்னுன். (II ராஜா 1 : 2—4)

(i) பரலோகத்திற் நஎடுப்போகுதல். (II ராஜா 2:11—13)

வாசிக்கவேண்டிய பாகம் I ராஜா 17, 18 அதிகாரங்கள்.

4. எலிசா:— அற்புதங்களைச் செய்யும் ஆண்டவரின் தீர்க்கதரிசி.

(பின்வரும் வேதபாகங்கள் இராஜாக்களின் இரண்டாம் புஸ்தகத்தில் உள்ளன)

(a) எலியாவின் ஆவியை இரட்டிப்பாகப் பெற்றவன். (II ராஜா 2 : 9—15)

(b) எரிகோவின் கெட்ட நீரை ஆரோக்கியமாக்கினன். (2 : 19—22)

(c) நிந்தித்த பிள்ளைகளைச் சபித்தான். (2 : 23, 24)

(d) வாய்க்கால் தண்ணீரால் நிரம்பிற்று. (3 : 16—20)

(e) விதவையின் எண்ணெயை வர்த்திக்கச் செய்தான் (4 : 1—7)

(f) சூனேமியாளின் மகனை எழுப்பினன். (4 : 18—37)

(g) பானையின் விஷத்தை நீக்கினன். (4 : 38—41)

(h) குஷ்டரோகி நாகமானைக் குணமாக்கினன். (5 : 9—14)

(i) மூழ்கிய கோடரியை மிதக்கச் செய்தான். (6 : 1—7)

(j) பரலோக சேனையால் அவன் பாதுகாக்கப்பட்டான். (6 : 13—17)

(k) சீரிய ராணுவத்தினருக்கு கண்மயக்கம் உண்டாக ஜெபித்தான். (6 : 18—23)

(l) சீரிய சேனை தப்பி ஓடுவதைமுன் அறிவித்தான். (7:1-7)

5. யெகூ: இஸ்ரவேலின் 10-வது ராஜா

(a) எலிசா இவனை அபிஷேகம் செய்தான். (II ரா. 9:1—7)

(b) ஆகாப் வீட்டாரனைவரையும் அழித்தான். (10 : 11)

(c) பாகாலின் பலிபீடம் முதலியவற்றை அழித்தான். (10 : 26—28)

(d) கர்த்தர் கட்டளைகளை அவன் மதிக்கவில்லை. (10 : 29-31)

குறிப்பு: கர்த்தர் கிழக்கிலிருந்து அசீரியரை அனுப்பிப் பத்துக் கோத்திரத்தாரையும் சிறைப்பிடித்துச் செல்லுமளவும் இஸ்ரவேலர் யெகூ கால முதல் விக்கிரக வணக்கத்திலும் துன்மார்க்கத்திலும் மிகவும் பெருகினர்கள்.

வாசிக்கவேண்டிய பாகம் II ராஜா 2, 5 அதிகாரங்கள்.

ஆலோசனைக்கான குறிப்புகள். நாள் 4

கர்த்தர் எலியாவைப் போஷித்ததுபோல, ஆண்டவரை முழு மனதோடு பின்பற்றுகிறவர்களுக்காக அவர் கவலைப்படுகிறார். அவர்களுடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்கிறார். மத். 6 : 33; சங். 34 ; 10.

பூகோளப் பாடம். நாள் 4

(இடங்களைக்குறி)

1. எலியாவுக்கும், பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் வாக்குவாதம் நடந்த கர்மேல் பர்வதம்.
2. யோர்தான் நதியைக் கடந்து பரலோகத்திற்கு ஏறிப்போகு முன் கடைசியாக விட்ட எரிகோ நகர்.
3. சீரிய தலைநகராகிய தமஸ்கு.
4. இஸ்ரவேலரது பகைவர் நாடாகிய மோவாப்.
5. குஷ்டரோகியான நாகமானின் நாடாகிய சீரியா.
6. இஸ்ரவேலர் சிறையாக சென்ற அசீரியா.

"உன் வேதாகமத்தை அறிந்துகொள்" நாள் 4

1. எலியாவைப் போஷித்தது யார்? 1 ராஜா 7 : 9—24.
2. கர்மேல் பர்வதத்தில் என்ன நேரிட்டது? 1 ராஜா 18 : 1४-46.
3. எலியா எப்படி வானத்திற்குப் போனார்? ! ராஜா 2 : 11—13.
4. விதவையின் எண்ணெய் பெருக எலிசா செய்யதென்ன? 2 ராஜா 4 : 1—7.
5. அவர் யாரை உயிரோடு எழுப்பினார்? 2 ராஜா : 18—37.
6. நீரில் விழுந்த கோடரியை எடுக்க அவர் என்ன செய்தார்? 2 ராஜா 6 : 1—7.
7. யார் ஆகாபின் குடும்பம் முழுவதையும் அழித்தது? 2 ரா. 10:11.
8. பாகால் வணக்கத்தை ஒழித்தது யார்? 2 ராஜா 10 : 26— 8.

நாள் 5, 6.

C. யூதாராஜ்யம்

குறிப்பு: யூதாவின் அரசர்கள் இஸ்ரவேலரது அரசர்களைப் போலல்லர். சில நல்ல அரசர் நன்கு ஆண்டனர். அவர்கள் பொல்லாத அரசர் செய்த அக்கிரமங்களை நாட்டைவிட்டு ஒழித்தனர். யூதாவின் வரலாற்றை நான்கு காலங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றும் க்ஷீணதிசையில் ஆரம்பித்து புத்துயிரோடு முடிவடைகிறது. இந் நான்கு காலங்களையும் தொடர்ந்து பாபிலோனிய சிறையிருப்புக்குமுன் நாடு மகா பயங்கர சீர்கேடு அடைந்தது.

(1) முதற் காலம் :

(a) க்ஷீணதசை: சாலொமோன் மகன் ரெகொபெயாம். (1 ராஜா 14 : 21, 22)

(b) புத்துயிர் யோசபாத்-யூதாவின் நாலாவது ராஜா.

(1) உண்மையான தொழுகை திரும்பவும் தொடங்குதல் (1 ராஜா 22 : 41—44)

(2) இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபோடு சேர்ந்து சீரியாவுக்கு விரோதமாக யுத்தஞ் செய்யச் செல்லல் (1 ராஜா 22 : 1—4)

(a) யுத்தத்தின் முடிவைப்பற்றி தேவனுடைய தீர்க்கதரிசியிடம் ஆலோசனை கேட்டல் (1 ராஜா 22 : 5; 8 : 14—18).

(b) தீர்க்கதரிசனப்படி ஆகாப் போரில் மாண்டான். (1 ராஜா 22 : 37)

(2) இரண்டாம் காலம்: (பின்வரும் வேதபாகங்கள் இராஜாக்களின் இரண்டாம் புஸ்தகத்தில் உள்ளன)

(a) க்ஷீணதசை: அத்தாலியாள் பொல்லாத ராணி. யோவாசைத் தவிர மற்ற அரச குடும்பத்தினர் அனைவரையும் கொன்றாள். (II ராஜா 11 : 1, 2)

(b) புத்துயிர்: யோவாஸ் யூதாவின் எட்டாவது ராஜா.

(1) யோவாஸ் ஏழு வயதாயிருக்கும்போது அத்தாலியாள் கொலையுண்டாள். (11 : 12—21).

(2) தேவனைப் பின்பற்றி ஆலயத்தைப் பழுது பார்த்தான். (12 : 2—14).

(3) மூன்றாவது காலம்.

(a) க்ஷீணதசை: ஆகாஸ், யூதாவின் 12-ம் ராஜா. அநேக தீமையான காரியங்களைச் செய்தான். (16 : 2—4)

(b) புத்துயிர்: ஆகாஸ் மகனாகிய எசேக்கியா யூதாவின் பதின்மூன்றாவது ராஜா (18 : 1)

குறிப்பு எசேக்கியாவின் ஆளுகையில் அசீரியர் இஸ்ரவேலரைச் சிறைப்படுத்திச் சென்றனர். (18 : 10—12).

(1) விக்கிரகங்களை அழித்துவிட்டுத் தேவனைப் பின்பற்றினார்கள். (18 : 4—6).

(2) அசீரியா ராஜாவாகிய சனெகரிப்பிடமிருந்து எருசலேம் விடுதலையடைய விண்ணப்பித்தான்.

(3) ஏசாயாவிடமிருந்து உறுதி வாக்கைப் பெற்று, கர்த்தருடைய தூதரால் சனகெரிப் சேனை அழிவதைக்கண்டான். (19 : 20, 32—36)

(4) மரணத்துக்கு ஏதுவான வியாதி வந்தது. விண்ணப்பம் கேட்டு, 15 வருஷம் கூடக் கொடுத்தார். (20 : 1—7)

(5) பாபிலோன் பிரதிநிதிகளிடம் தன் பொக்கிஷம் எல்லாவற்றையும் காட்டினான். ஏசாயா அதைக் கண்டித்தான். (20 : 12—19)

(4) நாலாவது காலம்.

(a) **க்ஷீணதசை:** மனாசே, யூதாவின் பதினாலாவது ராஜா. விக்கிரகங்களை உண்டாக்கினான். பாகாலின் பலிபீடங்களைப் பாதுகாத்தான். குற்றமில்லா ரத்தத்தைச் சிந்தினான். (21 : 1—9, 16)

(b) **புத்துயிர்:** யோசியா, யூதாவின் பதினாறாவது ராஜா.

(1) கர்த்தருக்கு முன் செம்மையானதைச் செய்தான். (22 : 1, 2)

(2) ஆலயத்தைப் பழுது பார்த்தல். (23 : 5, 6)

(3) நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்து மக்களுக்கு வாசித்தல். (22 : 8—13; 23 : 1—3)

(4) பஸ்காப் பண்டிகையைக் கொண்டாடல். (23 : 21, 22)

(5) விக்கிரக வணக்கத்தை அழித்தலும் தன்னைத் தேவனுக்குத் திரும்பவும் பிரதிஷ்டை செய்தலும். (23 : 24, 25)

(6) எகிப்து ராஜாவுக்கு விரோதமாய் எதிர்த்துச் செல்கையில் இறந்தான். (23 : 29, 30)

(5) பயங்கர வீழ்ச்சி,

குறிப்பு: யோசியாவுக்குப் பின் வந்த யூத அரசர்களெல்லாரும் துன்மார்க்கரும் தேவனைச்சிறிதும் மதியாதவருமாயிருந்தனர். இக்காலத்தில் எரேமியா தீர்க்கதரிசி மக்களது பாவங்களைக் கண்டு புலம்பினான். முழு அழிவும் நீண்ட சிறையிருப்பும் உங்களை எதிர்நோக்கியிருக்கின்றன என்று எச்சரித்தான். அவன் சொல்லை மக்கள் அசட்டை செய்தபடியால் நேபுகாத் நேச்சாரை அனுப்பினர். மூன்று முறை யூதா மீது படையெடுத்தான். ஒவ்வொரு தரமும் அநேகரைச் சிறைப்பிடித்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான். அரசனாகிய சாலொமோன் கட்டிய அழகான ஆலயத்தை முற்றிலு மழித்தான். ஏசாயா சொன்னபடி தேவாலயப் பாத்திரங்களை பாபிலோனுக்கு எடுத்துச் சென்றான். (20 : 16—18) எருசலேமை அக்கினியால் எரித்தான். யூதேயா நாடு பாழாய் விடப்பட்டது. (24 : 1—25, 30)

வாசிக்கவேண்டிய பாகம் — II இராஜா 11, 20 அதி.

ஆலோசனைக்கான குறிப்புகள் **நாள் 5, 6.**

ரெகொபெயாம் கர்த்தருடைய தீர்க்கதரிசியின் ஆலோசனையைக் கேளாமல் வாலிபரின் புத்தியீனமான ஆலோசனையைக் கேட்டான். அதினால் இராஜ்ஜியத்தை இழந்தான். யோசபாத் கர்த்தருடைய தீர்க்கதரிசியின் ஆலோசனையைக் கேட்டான். அவன் இராஜ்ஜியத்தைப் பெற்றான். நாம் கடவுளின் வார்த்தைக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படியும் பொழுது நமக்கு வெற்றிகரமான வாழ்க்கை உண்டு.

பூகோளப் பாடம் **நாள் 5, 6.**

(இடங்களைக் குறிப்பிடு)

1. தென் இராஜ்யமாகிய யூதா
2. யூதாவின் தலைநகராகிய எருசலேம்
3. அசீரியா அரசனாகிய சனகெரீப்பின் தலைநகராகிய நினிவே
4. பாபிலோன் மன்னனது தலைநகராகிய பாபிலோன்

உன் வேதாகமத்தை அறிந்து கொள் **நாள் 5, 6.**

1. உண்மையான தொழுதுகொள்ளுதலைத் திரும்பவும் கொண்டு வந்தது யார்? 1 ராஜா 22 : 41—46.

2. பொல்லாத ராணி யார்? 2 ராஜா 11 : 1, 2.

3. தேவாலயத்தைப் பழுது பார்த்தது யார்? 2 ராஜா 12 : 2, 14.

4. யாருடைய வாழ்க்கை 15 வருடங்கள் கூட்டிக் கொடுக்கப் பட்டது? 2 ராஜா 20 : 1—7.

5. திரும்பக் கண்டுபிடிக்கப்பட்ட நியாயப் பிரமாண புத்தகத்தை மக்களுக்கு வாசித்தது யார்? 2 ராஜா 23 : 21, 22.

நாள் 7, 8 **பகுதி 13.**

சிறையிருப்பு.

XIII,

A. **தானியேல், தேவனது பிரியமான இளவரசன்.**

(பின்வரும் வேத பாகங்கள் தானியேல் புஸ்தகத்தில் உள்ளன)

(1) பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டான். (தானி 1 : 3—7)

(2) ராஜ உணவாலும் திராட்ச ரசத்தாலும் தன்னைத் தீட்டாக்கக் கூடாதென அவற்றை மறுத்தான். (1 : 8—16)

(3) சொப்பனத்தின் பொருளைச் சொன்னதால் சிறந்த பதவி யடைதல். (1 : 17—21)

(4) நேபுகாத் நேச்சார் கண்ட 'பெரிய சிலை' சொப்பனத்துக்குப் பொருள் கூறல். (2 : 26—29)

(5) ராஜா நிறுத்திய பொற் சிலையை வணங்க அவனது மூன்று நண்பர்களும் மறுத்ததால் அக்கினிச் சூளையில் எறியப்படுதல். ஆண்டவர் அவர்களை அற்புதமாய்க் காத்தல். (3 : 1—28)

(6) யூதாது தேவனுடைய சார்பில் ராஜா கட்டளை பிறப்பித்தல். (3 : 29)

(7) நேபுகாத் நேச்சார் கண்ட, "பெரிய மரம்" சொப்பனத்திற்குப் பொருள் கூறல். (4 : 19—28)

(8) நேபுகாத் நேச்சார் மகன் பெல்ஷாத்சார் (பாவ) விருந்துண் கையில் சுவரில் எழுத்துண்டானது. அதற்கு அர்த்தம் கூறல். (5 : 1—29)

(9) மேதிய அரசன் தரியு, தானியேலை பிரதானிகளுக்குத் தலைவனாக்கினான். (5 : 30—6 : 3)

(10) பொறாமைக்காரரின் சதியிலகப்பட்டான். சிங்கக் கெபியில் போடடனர். (6 : 14—17)

(11) சிங்கக் கெபியினின்று விடுதலை. தரியு தேவனைப்புகழ்ந்தான். (6 : 18—28)

(12) பெர்சியனாகிய கோரேஸ் என்ற நாலாம் அரசனும் அவனைக் கண்ணியமாய் நடத்தினான். (6 : 28)

வாசிக்கவேண்டிய பாகம் தானியேல் 3, 6 அதி.

B. எசேக்கியேல் தேவனுடைய காவலாளன்

(பின்வரும் வேத பாகங்கள் எசேக்கியேல் புஸ்தகத்தில் உள்ளன)

(1) தானியேல் சிறை சென்று எட்டு வருடத்துக்குப்பின் இவனும் பாபிலோனுக்குச் சிறை சென்றான். (யோசேப்பு என்ற சரித்திர ஆசிரியர் மூலம் அறிகிறோம்)

(2) இஸ்ரவேல் வீட்டாருக்குக் காவலாளனாயிருக்க அழைப்புப் பெற்றான். (எசே. 3 : 17)

(3) பாவத்தை பட்சபாதமின்றிக் கண்டித்தான். சத்தியத்தைக் கடைபிடித்தான். (33 : 1—16)

(4) பாபிலோனிலுள்ள யூதரிடம், யூத ஜனங்களுக்கு வரும் மோசத்தைக்கூறி எச்சரித்தான். (21 : 1—3)

(இதே சமயத்தில் எரேமியாத் தீர்க்கத்தரிசியும், எருசலேமிலுள்ள யூதர்களை எச்சரித்தான்.) (எரேமி 34 1—3)

(5) மக்கள் கவனிக்கும்படி, விடுகதைகளையும், பழமொழிகளையும், உவமைகளையும், அடையாளச் செய்கைகளையும் உபயோகித்தல். (உதாரணம் 17 : 1—10)

(6) அநேக தரிசனங்களையும் விசேஷமாய் எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் காட்சியையும் கண்டான். (37 : 1—10)

(7) மீதியான யூதர் மீட்கப்பட்டு இஸ்ரவேல் நாட்டுக்கு வருவர் என முன்னுரைத்தல். (11 : 16—20)

வாசிக்கவேண்டிய பாகம் எசேக் 37 : 1—10.

ஆலோசனைக்கான குறிப்புகள். நாள், 7, 8.

தானி 1 : 8— கர்த்தரை சேவிக்க தானியேல் தன் இருதயத்தில் தீர்மானித்தான். ஆகையால் அவன் தீட்டுள்ள ஆகாரத்தைப் புசிக்கவில்லை. சிங்கக் கெபிக்குள்ளிருக்கும் பொழுதும் ஜெபித்தான். நாம் எப்பொழுதும் கர்த்தரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்படியத் தீர்மானம் செய்வோம்.

பூகோளப் பாடம் நாள் 7, 8.

தானியேலும், எசேக்கியேலும் சிறையிருந்த பாபிலோனைக்குறி.

உன் வேதாகமத்தை அறிந்துகொள் நாள் 7, 8.

1. தானியேல் எங்கே சிறையாகக் கொண்டுபோகப்பட்டான்? தானி 1 : 3—7.
2. தானியேல் எந்த சொப்பனத்தை அர்த்தப்படுத்தினான்? தானி 2 : 26—49.
3. தானியேலின் மூன்று நண்பர்களும் அக்கினிச் சூளையில் போடப்படக் காரணம் யாது? தானி 3 : 1—28.
4. கடவுளின் காவற்காரனாக அழைக்கப்பட்டது யார்? எசே 3 : 17.
5. உலர்ந்த எலும்புகளைப்பற்றிய தரிசனம் யாது? எசே 37:1—10.

நாள் 9 & 10 பகுதி 14

XIV. சிறைப்பட்டோர் சொந்த நாடு திரும்புதல்

A. எஸ்தர், கர்த்தரால் நியமிக்கப்பட்ட இராணி.

குறிப்பு. எஸ்தரின் சரித்திரம் யூதர் சிறையிலிருந்து சொந்த நாடு திரும்பின ஆரம்ப காலத்தில் நடந்தது. அவர்கள் சிறையிருப்பிலிருந்தாலும், தேவன் அவர்களை எவ்வளவாக நேசித்து பராமரிக்கிறார் என்பதை இது காட்டுகிறது. இக்கதையின் ஆரம்பத்தில் நாம் பாரசீக நாட்டிலுள்ள, சூசான் பட்டணத்தின், அழகிய சூசான் அரண்மனையில் இருப்பதாக எண்ணுவோம். முதலாம் அர்தசஷ்டா என்ற அகாஸ்வேரு, அந்த நாட்டை அரசாண்டான். இந்தக் கதையின் சம்பவங்களுக்குப்பின் எஸ்றாவும், நெகேமியாவும் இந்த நகரத்திலிருந்து யூதேயா நாட்டிற்குத் திரும்பி தங்கள் ஜனத்தார் எருசலேமைத்திரும்பக்கட்ட உதவி செய்தனர்.

(பின்வரும் வேதபாகங்கள் எஸ்தர் புஸ்தகத்தில் உள்ளன)

1. எஸ்தர் ராணியாகுதல்.

(a) வஸ்தி பெரிய விருந்தில் ராஜா முன் வர மறுத்தாள். (எஸ்தர் 1 : 5, 10—12)

(b) இன்னொரு ராணியைத் தெரிந்து கொள்ள ராஜா தீர் மானித்தல். (1 : 19—21)

(c) கன்னிப் பெண்கள் கூட்டத்தினின்று எஸ்தரைத் தெரிந்துகொண்டு, பட்டத்து ராணியாக்குதல். (2:8-17)

2. எஸ்தரின் இனத்தான் மொர்தெகாய், அரசனது உயிரைக் காத்தல். (2 : 21—23)

3. எஸ்தரின் ஜனங்களைப் பயமுறுத்தல்.

(a) பிரதான பிரபுவாகிய ஆமானை வணங்க மறுத்ததால் மொர்தெகாயை அவன் பகைத்தல். (3 : 2—5)

(b) மொர்தெகாயை மட்டுமல்ல அவன் ஜனங்களையும் கொல்ல ஆமான் சதி செய்தல். (3 : 6)

(c) ஆமான் அரசரிடம் பொய் சொல்லி, யூதருக்கு விரோத மாகக் கட்டளை பெறுதல். (3 : 8—10)

குறிப்பு: ஒரு குறிப்பிட்ட நாளில் எல்லா யூதரையும் கொல்ல எல்லா நாடுகளுக்கும், இக் கட்டளையை உடனே அனுப்பினர். எஸ்தர் தன் ஜாதியை அறிவிக்காதிருந்தாள்.

4. எஸ்தர் எச்சரிக்கப்படுதல்.

(1) ஆமானின் சதியை மொர்தெகாய் எஸ்தருக்கு அறி வித்தல். (4 : 9—14)

(2) எஸ்தர் தன் ஜனங்களுக்கு உதவி செய்வதாக வாக்களித் தல். (4 : 15, 16)

5. எஸ்தர் தன் ஜனங்களுக்காக வேண்டுதல்.

(a) எஸ்தரை ராஜா ஏற்று, தயவு அளித்தல். (5 : 2—6)

குறிப்பு: அழையாதிருந்தும் அரசன் முன் சென்றாள். இவ்வாறு செய்வது இவள் உயிருக்கு ஆபத்து. (4 : 11)

(b) எஸ்தர் செய்த முதல் விருந்தின் அழைப்புக்கு ஆமானும், ராஜாவும் உடன்படல். (5 : 8, 9)

(c) ஆமான் மொர்தெகாய்க்கு தூக்கு மரம் செய்யக் கட்டளை யிடல். (5 : 9—14)

(d) தன் உயிரைக் காத்ததால் மொர்தெகாயை ராஜா மேன்மைப் படுத்துதல். (6 : 1—12)

(e) இரண்டாவது விருந்தில் எஸ்தர் தன் ஜனங்களின் சத்துருவைப் பகிரங்கபடுத்துதல். (7 : 1—7)

(f) மொர்தெகாய்க்குச் செய்த தூக்கு மரத்தில் ஆமானைத் தூக்கினர். (7 : 10)

6. **எஸ்தரின் ஜனத்திற்கு ரட்சிப்பு.**

(a) ஆமானது ஸ்தானத்தை மொர்தெகாய்க்குக் கொடுத்தல். (8 : 2)

(b) தங்கள் உயிருக்காக யூதர் போராடலாம் என்று ராஜா உத்தரவு கொடுத்தல். (8 : 11, 12)

(c) எஸ்தரின் ஜனங்கள் தங்கள் சத்துருக்களைச் சர்வநாசம் செய்து ஒரு நாளை சந்தோஷ நாளாக நியமித்தல். (9 : 5, 19)

வாசிக்க வேண்டிய பாகம். எஸ்தர் 6, 7 அதிகாரங்கள்.

B. எஸ்ரு, தேவனது எழுத்தாளன்.

(பின் வரும் வேதபாகங்கள் எஸ்ரு புத்தகத்தில் உள்ளன)

(1) பாரசீக மன்னன் கோரேஸ் "சொந்த நாடு செல்லலாம்" என்ற கட்டளையைப் பிறப்பித்தல். (எஸ்ரு 1 : 4)

குறிப்பு: யூதர் எருசலேம் சென்று ஆலயம் கட்டலாமென இக்கட்டளை உத்தரவளிக்கின்றது. எரேமியா தீர்க்கதரிசி சொன்னபடி 70 ஆண்டுகள் சிறையிருப்பு முடிந்ததும் இக்கட்டளை பிறந்தது.

(2) செருபாபேலின் கீழ் 42360 யூதர் முதல் தடவையாக வந்தனர் என எழுதியுள்ளான். (2 : 1, 2, 64)

(3) கொடுத்த காணிக்கைகளைப் பற்றியும், பலிபீடம் கட்டினதையும், ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டதையும் எழுதியுள்ளான். (2 : 68, 69; 3 : 2, 10)

(4) ஆலயங் கட்டிமுடிந்ததையும், பஸ்கா பண்டிகையைத் திரும்ப ஏற்படுத்தினதையும் எழுதியுள்ளான். (6 : 14—19)

குறிப்பு: யூதர்கள் பாரசீக அரசன் கோரேசுக்கு விரோதமாகக் கலகம் பண்ணச் சதிசெய்கிறூர்கள் என்று, பொல்லாத மனிதர்கள் அரசனிடம் புகார் சொல்லி ஆலயம் முடிவுறாதபடி தடைசெய்தனர். கட்டட வேலையை நிறுத்தும்படி அரசன் கட்டளையிட்டான். தீர்க்கதரிசிகளான ஆகாயும் சகரியாவும் தொடர்ந்து கட்டுமாறு உற்சாகப்படுத்தினூர்கள். புது மன்னன் தரியு, ஆலயத்தை முடிக்குமாறு அனுமதித்தான். (4 : 11—13, 24)

(5) வெள்ளி, பொன்னோடும், பாரசீக மன்னன் அர்தசஷ்டாவின் கடிதத்தோடும் எருசலேம் எகுதல். (7 : 6—16)

குறிப்பு : செருபாபேல் போய் 80 ஆண்டிற்குப் பின் எஸ்றா எருசலே மூக்குப் போனான்.

(6) எவ்வாறு தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப் படிய வேண்டு மென்று ஜனங்களுக்குப் புத்தி சொல்லல். (10 : 10—12)

வாசிக்கவேண்டிய பாகம். எஸ்றா 7 : 11—28.

C. நெகேமியா, தேவனது மதில் கட்டுவோன்.

(பின் வரும் வேதபாகங்கள் நெகேமியா புஸ்தகத்தில் உள்ளன)

குறிப்பு : நெகேமியா ஒரு யூதன். மகா விசுவாசமுள்ள ஜெப வீரன். அர்தசஷ்டா என்ற பாரசீக அரசனுடைய பானபாத்திரக் காரன். எருசலேம் அழிவையும், மதில் விழுந்ததையும் கேட்டு அழுது, உபவாசித்து, தன் ஜனங்களுக்கு உதவி செய்ய அனுப்புமாறு தேவனிடம் ஜெபித்தான். (நெகே 1 : 3—11)

குறிப்பு : எஸ்றா எருசலேமுக்குப் போய் 13 ஆண்டுகளுக்குப் பின் நெகேமியா முதல் தடவையாக எருசலேமுக்குச் சென்றான்.

(1) அரசனிடம் அனுமதி பெற்றுப் போகுதல். (2 : 4—8)

(2) மறுபடியும் மதிலைக் கட்ட மக்களைத் தூண்டுதல். (2:17, 18)

(3) இஸ்ரவேலரது எதிரிகளான சன்பல்லாத், தொபியா என்பவரின் எதிர்ப்பு. (4 : 1—2)

(4) சகாயத்துக்குத் தேவனிடம் ஜெபம். (4 : 4—6)

(5) பாதிப்பேர் பணிசெய்யவும் பாதிப்பேர் பாதுகாக்கவும் மக்களை ஒழுங்கு செய்தல். (4 : 16—23)

(6) மதிலை முடித்து, தேவனை மகிமைப்படுத்துதல். (6 : 15—16)

(7) வேதபாரகனான எஸ்றா பிரசங்கத்தைக் கேட்டு நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிய ஜனங்களுக்குப் புத்தி கூறுதல். (8 : 5—12)

(8) தேவனோடு உடன்படிக்கை செய்தபோது மக்களின் மகிழ்ச்சி. (10 : 29)

வாசிக்கவேண்டிய பாகம். நெகே 2, 6 அதிகாரங்கள்.

இறுதிக் குறிப்பு: எருசலேமுக்குத் திரும்பிய மீதியான யூதர்கள் மறுபடியும் விக்கிரகத்தை வணங்கவில்லை .கர்த்தர் அவர்களுக்குக் கற்பிக்க முயற்சித்த பாடத்தைக் கடைசியில் கற்றுக்கொண்டார்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூதருக்கு அனுப்பிய கடைசித் தீர்க்கதரிசி மல்கியா: இவன் யோவான் ஸ்நானகன் வருகையை முன் மொழிந்தான். பழைய ஏற்பாடு இவனது தீர்க்க தரிசனத்தோடு முடிவுறுகின்றது. அதன் பின்னர் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னருள்ள 400 வருட காலம் வருகின்றது. அதை 'நிசப்த காலம்' என்றழைப்பர் (The Period of Silence) இக்காலத்தில் பாரசீக ஆட்சி பாழாகி அலெக்சாந்தர் ஆட்சி ரோம இராஜ்ஜியத்தால் விழுங்கப்படுமட்டும் நிலைத்து நின்றது. கஷ்டகாலங்களை யூதர் கடக்க வேண்டியதாயிருந்தும் கடவுள் வணக்கத்தில் உறுதியாயிருந்தனர்.

காலம் நிறைவேறியபோது ரோமாபுரியை ஆண்ட அகுஸ்துராயன் ஆளுகையின்கீழ் உலக முழுவதிலும் அமைதி நிலவிற்று. அப்போது இஸ்ரவேலரது நம்பிக்கையான மேசியா என்ற உலக ரட்சகரான இயேசுவானவர் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார்.

ஆலோசனைக்கான குறிப்புகள் — நாள் 9, 10

எஸ்தர் மரணத்தையும் பொருட்படுத்தாது. தன் ஜனத்திற்காக வேண்டுதல் செய்ய ராஜ சமுகத்தில் பிரவேசித்தாள். நமக்கும் இவ்வுலகத்தில் அழிந்து போகும் ஆத்துமாக்களைப் பற்றிய பாரம் இருக்குமானால் அவர்களுடைய இரட்சிப்புக்காக ஜீவனையும் கொடுக்க நாம் ஆயத்தமாயிருப்போம்.

பூகோளப் பாடம் — நாள் 9, 10

(இடங்களைக் குறிப்பிடு)

1. சிறை பிடிக்கப்பட்ட அநேக யூதர்கள் வசித்த பாரசீகம்.
2. சிறை பிடிக்கப்பட்ட அநேக யூதர்கள் திரும்ப ஆசித்த எருசலேம் (பாரசீகத்திலிருந்து 700 மைல்)

"உன் வேதகாமத்தை அறிந்துகொள்" — நாள் 9, 10

1. மொர்தெகாய் யார்? எஸ்தர் 2 : 15
2. ஆமான் யூதரைப் பகைக்கக் காரணம் யாது? எஸ்தர் 3 : 2-5
3. தூக்குமரம் யாருக்காக செய்யப்பட்டது? எஸ்தர் 5 : 9-14.
4. அதில் தூக்கப்பட்டது யார்? எஸ்தர் 7 : 10.
5. இராஜ சமுகத்துக்குப் போகுமுன் எஸ்தர் செய்ததென்ன? எஸ்தர் 4 : 16.
6. எஸ்றா ஜனங்களை என்ன செய்யச் சொல்லுகிறார்? எஸ்றா 10 : 10-12.

மனப்பாடம்

(ஆசிரியர் அன்றன்றைக்குரிய மனப்பாட வசனங்களை விளக்கிக் காட்டி, வசனம் இருக்குமிடத்தோடுகற்றுவரச் செய்யவேண்டும். ஆசிரியர் மனப்பாட வசனங்களைப் பிள்ளைகளிடமிருந்து கேட்கப் போதுமான நேரமிருக்குமே தவிர, படிக்கச் செய்ய நேரமிருக்காது. ஆதலால் பிள்ளைகளை வெளிநேரத்தில் படித்துவரச் செய்யவும்.)

நாள்	வசனம்
1.	யோ. 15 : 1—4
2.	யோ. 15 : 5—8
3.	யோ. 15 : 9—14
4.	யோ. 15 : 15—19
5.	யோ. 15 : 20—23
6.	யோ. 15 : 24—27
7.	சங். 91 : 1—5
8.	சங். 91 : 6—10
9.	சங். 91 : 11—16
10.	நீதி. 23 : 29—32

இரண்டாம் பாட நேரத்தில் (2nd Period) கற்றுக் கொடுப்பவை

II

யோவான் சுவிசேஷம்

ஒவ்வொருநாளும் கற்றுக் கொடுக்கவேண்டிய வேதபாகத்தை நாள் 1. நாள் 2, நாள் 3 என்று குறிக்கப்பட்டுள்ளது. அடியில் வரும் குறிப்பு உங்களுக்கு வழிகாட்டி. இதுவுமன்றி உங்கள் மாணவர் மனதில் வைக்குமாறு யோவானைப்பற்றியும் அவனது நூலைப்பற்றியதுமான சில விசேஷித்த காரியங்களாவன.

(1) சாதாரண தலைப்பு (2) முக்கிய வாக்கியம் (Key Verse)

(3) யோவான் சுவிசேஷத்தில் உள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் வரும் இரு முக்கிய சம்பவங்கள்.

ஒவ்வொரு அதிகாரத்திலுள்ள முக்கிய வாக்கியத்தை மாணவர் படிக்க ஒரு படம் வரைக. 21 ஆரைக்கால்களுடைய (Spokes) பெரிய ஒரு சக்கரம் போன்ற ஒரு படம் வரைக. ஒவ்வொரு ஆரையும் யோவானிலுள்ள ஓர் அதிகாரத்தைக் காட்டும். ஆரைக்காலில் (1) அதிகாரத்தின் எண்ணையும் (2) ஒவ்வொரு அதிகாரத்தின் தலைப்பையும் (3) முக்கிய வாக்கியம் இருக்குமிடத்தையும் வரிசைக்கிரமாக எழுத வேண்டும்.

அல்லது— மஞ்சள் நிறமுள்ள தடித்த அட்டையில் திறவுகோல் போல வெட்டி அதிகார எண்ணையும் அதன் தலைப்பையும் ஒரு பக்கம் எழுதலாம். மறுபக்கம் முக்கிய வாக்கியம் இருக்குமிடத்தை எழுதலாம். அதிகாரம் ஒன்றைப் படிந்தவுடனே அந்த அதிகாரத்திற்குரிய திறவு கோலை மாணவரிடம் கொடுக்கவும். ஷை திறவுகோல்களை மாணவர் ஒழுங்காகக் கிரமப்படி ஓர் கயிற்றில் கோர்த்து வைக்கவும்.

நாள் 1.

I. ஆக்கியோனுக்கும் அவனது நூலுக்கும் முகவுரை.

A. யோவான், அன்பான அப்போஸ்தலன்.

1. கலிலேயாவிலுள்ள பெத்சாயிதாவில் பிறந்தான்.
பெற்றோர்-செபதேயு-சாலோமே. (மாற். 1:19 மாற். 15:40)

2. வரங்கள்.

(1) அனலும் அபிமானமுமுள்ளவன்.

(2) சாமர்த்தியமும் தாழ்மையுமுள்ளவன்.

(3) ஆண்டவர்மீது ஆழ்ந்த அன்புள்ளவன்.

3. சிலகாலம் யோவான் ஸ்நானகனைப் பின்பற்றினன்.
(யோ. 1 : 35—40)

4. தந்தைக்கு உதவி செய்கையில் கிறிஸ்துவானவர் அழைத்தார்.
மத். 4 : 21.

தந்தை செல்வமுள்ள செம்படவன். (மாற் 1 : 20)

5. சீஷரில் சிறுவன். கிறிஸ்து மீது பக்தி மிகுந்த சீஷன்.

(1) கிறிஸ்துவோடுள்ள அவரது விசேஷித்த ஐக்கியத்தைக் காணலாம்.

(a) யவீரு மகளை எழுப்புகையில் கூட இருந்தான்.
(லூக் 8 : 51)

(b) மறுரூப மலையில் கூட இருந்தான். (லூக் 9 : 28)

(c) கெத்சமனேத் தோட்டத்தில் கூட இருந்தான்.
(மத் 26 : 37)

(d) சிலுவையின் பக்கத்தில் மரியாளோடு சேர்ந்து நின்றான். (யோ 19 : 26, 27)

(e) உயிர்த்தெழுந்த பின் ஒருவரையொருவர் காணல். (யோ 21 : 1, 2)

(f) பத்மு தீவில் இயேசுவைப்பார்த்தல். (வெளி 1:9, 17—19)

6. சபையில் ஓர் அப்போஸ்தலன்.

(1) பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் அவனது ஊழியத்தைக் காணலாம்.

(a) அவனும் பேதுருவும் செய்த முதல் அற்புதம். (அப் 3 : 11)

(b) பேதுருவோடு முதல் சிறைவாசம் (அப்: 4 : 2, 3; 19—21)

(c) பேதுருவோடு முதற் சுவிசேஷப் பயணம் (அப். 8 : 14)

(d) எருசலேமிலுள்ள சபையில் பேதுருவோடும் (கேபா) யாக்கோபோடும் இருத்தல். (கலா. 2 · 9)

7. சபையின் எழுத்தாளர்.

(1) வேதாகமத்தில் யோவான் எழுதிய நூல்கள் :—

(a) யோவான் சுவிசேஷம் (வரலாறு)

(b) மூன்று நிருபங்கள் (கடிதங்கள்)

(c) வெளிப்படுத்தின விசேஷம் (தீர்க்கத் தரிசனம்)

B. யோவான் சுவிசேஷம்.

1. இயேசுவானவர் தேவகுமாரன் என நிரூபிக்க எழுதினன். (யோ 1 : 1—5)

2. ஆண்டவரது அந்தரங்க வாழ்க்கையையும், நினைவுகளையும் வெளிப்படுத்த எழுதினன். (யோ 11 : 33—36)

3. இரட்சகரது வார்த்தைகளைப் பதிவு செய்ய எழுதினன்.

(1) எட்டு அதிசயங்கள் மட்டும்.

(2) உவமை ஒன்றுகூட இல்லை.

(3) மற்ற சுவிசேஷங்களில் எழுதப்படாத ஆவிக்குரிய மாபெரும் செய்திகள்.

4. எல்லா மக்களையும் கிறிஸ்துவண்டை இழுப்பதற்கு வற்புறுத்தல்.

(1) "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவர்" (யோ. 1 : 14)

(2) "தேவ ஆட்டுக்குட்டி" (யோ. 1 : 36)

(3) "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ" (யோ. 3 : 16)

(4) "நித்திய ஜீவன்" (யோ. 5 : 24)

(5) "ஜீவ அப்பம் நானே" (யோ. 6 : 48)

(6) "ஜீவ தண்ணீர் நானே" (யோ. 7:37) (ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன்)

(7) "நானே உலகிற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோ. 8 : 12)

(3) "நானே நல்ல மேய்ப்பன்" (யோ. 10 : 11)

(9) "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோ. 11 : 25)

(10) "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோ. 14 : 6)

(11) "நான் மெய்யான திராட்சச் செடி" (யோ. 15 : 1)

(12) "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோ. 18 : 36)

நாள் 2

யோவான் சுவிசேஷத்தை அதிகாரம், அதிகாரமாகப் படித்தல்

அதிகாரம் 1

(1) தலைப்பு: **தேவகுமாரன்.**

(2) **முக்கியவாக்கியம் :** "ஆதியிலே வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த எார்த்தை தேவனாயிருந்தது" (யோ. 1 : 1)

(3) **முக்கிய நிகழ்ச்சிகள்:**

(1) யோவான்ஸ்நானகன் இயேசுவைக் குறித்துச் சாட்சி கொடுத்தான்.

(2) அந்திரேயா, சீமோன், யோவான், பிலிப்பு, நாத்தான்வேல் என்ற ஐவரையும் இயேசு அழைத்தல்

அதிகாரம் 2

(1) தலைப்பு : **மனுஷ குமாரன்.**

(2) முக்கிய வாக்கியம் : இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானாவூரிலே செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். (யோ. 2 : 11)

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) இயேசு கானாவூர் கலியாணத்தில் தண்ணீரைத் திராட்சரச மாக்கினார்.

(2) இயேசு வியாபாரிகளையும் காசுக்காரரையும் ஆலயத்தை விட்டு விரட்டினார்.

நாள் 3

அதிகாரம் 3

(1) தலைப்பு : **தெய்வீகப் போதகர்.**

(2) முக்கிய வாக்கியம்; தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோ. 3 : 16)

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) இயேசு தேவனுடைய ராஜ்யத்தில் எவ்வாறு பிரவேசிக்க வேண்டும் என்று நிக்கொதேமுவுக்குப் போதித்தல்

(2) இயேசுவே மேசியா என யோவான் ஸ்நானகன் தன் சாட்சியைத் திரும்பவும் உறுதிப்படுத்தல்.

அதிகாரம் 4

(1) தலைப்பு : **ஆத்தும ஆதாயம் செய்வோர்.**

(2) முக்கிய வாக்கியம் : "உன் சொல்லினிமித்தமல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" (யோ. 4 : 42).

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) இயேசு, சமாரிய ஸ்திரியையும் அவள் ஜனங்களையும் தேவனுடையவர்களாக்கினார்.

(2) இயேசு, ராஜாவின் மனுஷனது மகனைத் தூரத்திலிருந்து சொஸ்தமாக்கினார்.

நாள் 4

அதிகாரம் 5.

(1) தலைப்பு: மகா மருத்துவர். (வைத்தியர்)

(2) முக்கிய வாக்கியம்: "இயேசு, அவனை நோக்கி உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார்" (யோ 5 : 8)

(3) முக்கியநிகழ்ச்சிகள்.

(1) இயேசு, 38 வருட வியாதிக்காரனை பெதஸ்தா குளத்தில் ஓய்வு நாளில் குணமாக்குதல்.

(2) இயேசு, ஓய்வு நாள் மீறுதல் பற்றிய யூதரின் குற்றச் சாட்டிற்கு விடையளித்தல்.

அதிகாரம் 6.

(1) தலைப்பு: ஜீவஅப்பம். (உயிர் உணவு)

(2) முக்கிய வாக்கியம்: "இயேசு அவர்களை நோக்கி "ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" (யோ 6 : 35)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) பையனது உணவால் ஐயாயிரம் பேரைப் போஷித்தல்.

(2) நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுரு அறிக்கையிடுதல்.

நாள் 5

அதிகாரம் 7.

(1) தலைப்பு: ஜீவத் தண்ணீர்.

(2) முக்கிய வாக்கியம்: "இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன்" (7 : 37)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) தேவனது வேளை வரும் வரைத் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்த மறுத்தல்.

(2) இயேசு கூடாரப் பண்டிகையன்று ஆத்தும தாகத்தை தாம் தீர்க்க முடியுமென்றார்.

அதிகாரம் 8.

(1) தலைப்பு: உலகிற்கு ஒளி.

(2) முக்கிய வாக்கியம்: "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்." (யோ 8 : 12)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) பாவஞ் செய்த பெண்மீது குற்றப்படுத்தினவர்களை வெட்கப்படுத்தி அவளை மன்னித்தனுப்பினர்.

(2) தாம் உலக ஒளியென யூதரிடம் சாட்சி சொல்ல அவர்கள் கல்லெறிய முயன்றனர்.

அதிகாரம் 9.

(1) தலைப்பு: அற்புதங்களைச் செய்கிறவர்.

(2) முக்கிய வாக்கியம்: "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது" (யோ 9 : 4)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) பிறவிக் குருடனுக்கு இயேசு பார்வையளித்தல்.

(2) குருடன் கிறிஸ்துவை விசுவாசித்தல்.

நாள் 6

அதிகாரம் 10

(1) தலைப்பு: நல்ல மேய்ப்பன்.

(2) முக்கிய வாக்கியம்: "நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். (யோ. 10 : 11)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) இயேசு யூதரிடம் தாம் நல்ல மேய்ப்பரென்றும், கள்ள மேய்ப்பருக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

(2) சில யூதர் இயேசு தேவ தூஷணம் சொன்னாரெனக் குற்றங் கூறினர். மற்றவர்களோ அவரை விசுவாசித்தார்கள்.

அதிகாரம் 11

(1) தலைப்பு : **உயிர்த்தெழுதலும் ஜீவனும்.**

(2) **முக்கிய வாக்கியம் :** "இயேசு அவளை நோக்கி : நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோ. 11 : 25)

(3 **முக்கிய நிகழ்ச்சிகள் :**

(1) இயேசு தம் நண்பன் லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

(2) காய்பா என்ற பிரதான ஆசாரி இயேசுவைக் கொல்ல சதி செய்தான்.

அதிகாரம் 12

(1) தலைப்பு : **இஸ்ரவேலின் ராஜா.**

(2) **முக்கிய வாக்கியம் :** "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (யோ. 12 : 13)

(3) **முக்கிய நிகழ்ச்சிகள் :**

(1) லாசருவின் சகோதரி — மரியாள் இயேசுவின் பாதங்களில் தைலம் பூசினாள்.

(2) இயேசு எருசலேமுக்கு வெற்றி பவனி சென்று தம் மரணத்தை முன்னறிவித்தார்.

நாள் 7

அதிகாரம் 13

(1) தலைப்பு : **ஊழியர்.**

(2) **முக்கிய வாக்கியம் :** "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவின துண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள். (யோ. 13 : 14)

(3) **முக்கிய நிகழ்ச்சிகள் :**

(1) தம் சீஷர்களின் கால்களைச் சுத்திசெய்து உண்மையான ஊழியத்தின் மாதிரியை அவர்களுக்குக் காட்டினார்.

(2) யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுப்பானென்று சீஷர்களுக்கும் யோவானுக்கும் தெரிவித்தார்.

அதிகாரம் 14

(1) தலைப்பு : **தேற்றரவாளன்.**

(2) முக்கிய வாக்கியம் : "நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன். உங்களிடத்தில் வருவேன்" (யோ. 14 : 18)

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) இயேசு தம் சீஷரிடம் தாம் மறுபடியும் வந்து அவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துப் போவதாகக்கூறி அவர்களைத் தேற்றினார்.

(2) அவர்களை விட்டுத் தாம் போனபின் அவர்களைத் தேற்றும்படி பரிசுத்தாவியை அனுப்புவதாக வாக்களித்தார்.

நாள் 8

அதிகாரம் 15

(1) தலைப்பு : **மெய்யான திராட்சச் செடி.**

(2) முக்கிய வாக்கியம் : "நான் மெய்யான திராட்சச் செடி. என் பிதா திராட்சத் தோட்டக்காரர்" (யோ. 15 : 1)

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) தமக்கும் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கும் உரிய சம்பந்தத்தை திராட்சச் செடி, கொடியின் உதாரணத்தின் மூலம் காண்பித்தார்.

(2) "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்." என்ற மாபெரும் கற்பனையை வற்புறுத்தினார். (யோ. 15 : 12)

அதிகாரம் 16

(1) தலைப்பு : **வெற்றி வீரர்.**

(2) முக்கிய வாக்கியம் : "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன். (யோ. 16 : 33)

(3) முக்கிய நிகழ்ச்சிகள் :

(1) இயேசு சீஷர்களிடம் தாம் போகவேண்டுமென்றும், போவாராகில் தேற்றரவாளனை அனுப்புவதாகவும் வாக்களித்தார்.

(2) நீங்கள் துக்கப்படுவீர்களென்றும் ஆனால் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறுமென்றும் முன்னறிவித்தார்.

அதிகாரம் 17.

(1) தலைப்பு: **பிரதான ஆசாரி.**

(2) முக்கிய வாக்கியம்: "நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல் நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே" (யோ 17 : 9)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) தம்மை மகிமைப் படுத்தும்படி பிதாவிடம் ஜெபித்தார்.

(2) தம் சீஷர்களும் எல்லா விசுவாசிகளும் இப்பாவ உலகத்திலிருக்கையில் அவர்களைப் பாவத்தினின்று காக்கும்படி வேண்டிக்கொண்டார்.

நாள் 9

அதிகாரம் 18.

(1) தலைப்பு: **பாடுபடுகிறவர்.**

(2) முக்கிய வாக்கியம்: "அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி உன் பட்டயத்தை உறையிலே போடு. பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" (யோ 18 : 11)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தல், கைதியாக்குதல், விசாரணை செய்தல்.

(2) கிறிஸ்து சிலுவையில் அறையப்பட தீர்ப்பு.

அதிகாரம் 19.

(1) தலைப்பு: **சிலுவையில் அறையுண்ட இரக்ஷகர்.**

(2) முக்கிய வாக்கியம்: "இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது என்று சொல்லி தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்கொடுத்தார்." (யோ 19 : 30)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) கிறிஸ்துவை சிலுவையிலறைதல்.

(2) அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில் அடக்கம் செய்தல்.

நாள் 10

அதிகாரம் 20.

(1) தலைப்பு: உயிர்த்தெழுந்த இரக்ஷகர்.

(2) முக்கிய வாக்கியம்: இயேசு அவளை நோக்கி "என்னைத் தொடாதே. நான் இன்னும் என் பிதாவினிடத்தில் ஏறிப் போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு." (யோவான் 20 : 17)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்:

(1) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

(2) தம்மைப் பின்பற்றினோர்க்கு கிறிஸ்து தரிசனமாகுதல்.

அதிகாரம் 21.

(1) தலைப்பு: மன்னிக்கும் மீட்பர்.

(2) முக்கிய வாக்கியம்; இயேசு சீமோன் பேதுருவை நோக்கி "யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர் என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்." (யோவான் 21 : 15)

(3) முக்கிய நிகழ்ச்சிகள்.

(1) தம் சீஷருக்கு கிறிஸ்து திரும்பவும் தோன்றினர்.

(2) கிறிஸ்து பேதுருவை மன்னித்து தம்மை உண்மையாகப் பின்பற்ற கட்டளையிட்டார்.